தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2014 மீனம் 20 (3 - 4 - 1983) விலை 65 காசு — இதழ் எண்: 15 | பகுதி 20-21

★ சேலம் உருக்காலைக் குடியிருப்பில் பார்ப்பனரின் கொட்டம்!

★ அங்குள்ள பள்ளியில் ஆங்கிலம், இந்தி, சமசுக்கிருதம் மட்டுமே பயிற்றுவிக்கப்படும் கொடுமை!

★ தமிழ்மொழி அறவே புறக்கணிக்கப் பெறுகிறது!

★ தமிழ்நாட்டிலேயே இந்த நிலைமை என்றால், தமிழன் தமிழ்மொழியைப் படிப்பது எங்கு? எப்போது

★ தமிழ்நாட்டு அரசு இதுபோன்ற கொடுமைகளையெல்லாம், தட்டிக் கேட்டுத் தடுத்து நிறுத்தவில்லையானால் தமிழின் எதிர்காலமே இருண்டு போகும்!

★ அரசு உடனே தலையிட்டு ஆவன செய்க

சேலம்: மார். 30:— சேலம் உருக்காலை (Steel Plant)க்கென மோகன் நகர் என்னும் பெயரில் நகரியம் (Town Ship குடியிருப்பு) ஒன்று உள்ளது. இம் மோகன் நகரில் ஏறத்தாழ 250 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இக்குடும்பத்தினரின் பிள்ளைகளும், அதனைச் சுற்றியுள்ள சிற்றூர்களில் வாழ்ந்து வரும் உருக்காலையின் பணியாற்றும் தொழிலாளர்களின் பிள்ளைகளும் படிப்பதற்கென ஒரு தனியார் பள்ளி உண்டு. இதன் பெயர் 'வித்யா மந்திர்' (தமிழ்நாட்டில் தோற்றுவிக்கப் பெறும் பள்ளிகளுக்கும் சரி, நிறுவனங்களுக்கும் சரி, பார்ப்பனர்கள் தமிழில் பெயரிடுவதில்லை என்பதை, இந்த மானங்கெட்டத் தமிழர்கள் முதலில் உணரவேண்டும்.) இந்த 'வித்யா மந்திர்' ஒப்பந்த அடிப்படையில் ஏற்பட்ட தனியார் பள்ளி. இது சென்ற ஆண்டு சூன் திங்கள் தொடங்கப் பெற்று நடைபெற்று வருகிறது.

இப்பள்ளியில் நடுவண் அரசுப் பாடத் திட்டப்படி கல்வியமைப்பு உள்ளது. அதன்படி இங்கு ஆங்கிலம் முதல்மொழியாகவும், இந்தி இரண்டாம் மொழியாகவும் கட்டாயமாகக் கற்பிக்கப்படுகின்றன. மூன்றும் பாடம் விருப்பப்பாடம். இதில் சமசுக்கிருதமும் தமிழும் பயிற்றுவிக்கப் பெறுகின்றன, மேலும் பாடங்கள் அனைத்தும் ஆங்கில வழியாக (English Medium) மட்டுமே கற்பிக்கப்படுகின்றன. தமிழ் வழியாகப் (Tamil Medium) பாடங்களைக் கற்பிக்கும் வகுப்புகள் இல்லை. பள்ளி தொடங்கப்படும் பொழுதே தமிழைப் புறக்கணிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பார்ப்பனர்கள் செயல்பட்டதாகத் தெரிகிறது. எனவே தமிழ்வழியாகவோ, தமிழிலோ கற்பிக்கப்படும் எண்ணமே அவர்களுக்கு இருந்திருக்கவில்லை என்று உணர முடிகிறது.

மேலும் இப்பள்ளி ஒப்பந்த அடிப்படையில் இங்கு அமைந்திடக் காரணம், பெரும்பாலான அதிகாரிகளின் பிள்ளைகள் சுவர்ணபுரி (இது அழகாபுரம் என்று தமிழ்ப் பெயரால் இருந்த பகுதி. இதையும் பார்ப்பனர்கள் 'ஸ்வர்ணபுரி' என்று வடமொழி மாற்றம் செய்திருக்கின்றனர்.) என்னும் சேலம் நகர் பகுதியில் உள்ள பகுதியில் பயின்று வந்தவர்கள் என்பதே.

மாதம் ஒன்றுக்கு 'வித்யா மந்திர்' பள்ளியில் பயிலும் மாணவர் ஒருவரிடம் 30 உருபா கல்விக் கட்டணமாகத் தண்டப் பெறுகிறது. இதில் உருக்காலை ஆளுமை (நிர்வாகம்) மாணவரின் தந்தையான பணியாளர்க்கு ஏறத்தாழ 50% திரும்ப வழங்குகிறது. இது தவிர, பள்ளிக் கட்டடம், மின்சாரம், மிசைகள், நாற்காலிகள் முதலிய தட்டு முட்டுப் பொருள்களை ஒப்பந்தக்காரர்க்கு இலவயமாக வழங்குவதுடன், அவர்களுக்கு ஏற்படும் இழப்பையும் ஏற்றுக் கொள்கிறது.

இதில் இன்னோர் உண்மை தின் என்னவென்றால் அங்குள்ளான் உருக்காலையில் பணியாற்றும் படிக பணியாளர்களில் ஒரு கணிசமான தொகையினர், தங்கள் பிள்ளைகளைத் தமிழ் வழியாகக் கற்பிக்க விரும்பமிருந்தும், வேறு வழியில்லாததால் அனைத்துப் பிள்ளைகளுக்கும் ஆங்கில வழியாகப் படிக்கவும், இந்தி கற்பிக்கவுமே நேரிடுகிறது என்பதே.

இனி, இவ்வுருக்காலை வளாகத்தில் I. N. T. U. C, C.I.T.U. ஆகிய இரண்டு தொழிலாளர் இயக்கங்களும், அதிகாரிகளுக்கென ஒரு கூட்டமைப்பும், முத்தமிழ் மன்றம் ஒன்றும் (பெரும்பாலும் பார்ப்பனர்களைக் கொண்டது) இருப்பினும், இக்குறைபாட்டினை நீக்கிட எந்த அமைப்பும் முனைந்ததாகத் தெரியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கடந்த 17—3—83 அன்று தொழி

(8-ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்படச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

★ இந்தியாவின் இணைப்பு மொழியாக இருக்கத் தகுந்தது இந்தி மொழியன்று; ஆங்கிலமே!

★ இந்தி கற்றோர்க்கு வடநாட்டில் வேலை கிடைக்கும் என்பது ஒரு மாயை !

★ கட்டாய இந்தித்திணிப்பு எதிர்கால இந்தியாவைச் சீர்குலைக்கும் !

இக்கட்டுரை திரு. நெல்லை செபமணி அவர்கள் துக்ளக் 15—2—83 நாளிட்ட இதழில இந்திமொழி பற்றி எழுப்பியுள்ள சில வினாக்களுக்கு விடைதருமுகத்தான் எழுதப் பெறுவதாகும். அவர் தம் கூற்றும், அது தொடர்பான உண்மைகளும் பின்வருமாறு .—

கூற்று: 1—

''சீனாவிலும், உருசியாவிலும், அமெரிக்காவிலும், பக்கத்தில் உள்ள பாக்கித்தானிலும், வங்காள தேசம், பர்மாவிலும் பல மொழிகள் புழக்கத்தில் இருக்கின்றன. இருந்தும் பெரும்பான்மை மக்கள் பேசும் மொழியை மட்டுமே இணைப்பு மொழியாக ஏற்றுக் கொண்டுள்ளனர்'' என்று திரு செபமணி குறிப்பிட்டுள்ளார். இந்தியை எதிர்ப்பது தவறு என்று நிலைநாட்ட முன் வருகிறார்.

உண்மை :—

தமிழர்கள் இந்தி மொழியை எதிர்க்கவில்லை. அம்மொழி இந்தியாவின் ஆட்சி மொழியாக அரியணை ஏற்றப்படுவதைத் எதிர்க்கின்றனர். ஆட்சிமொழி என்பது அனைத்து மக்களுக்கும் இணையுரிமையளிப்பதாயிருக்க வேண்டும். அவ்வன்றி அந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவருக்கு அதிக நலன் அளிப்பதாயிருக்கக் கூடாது. இந்தி எதிர்ப்பாளர்கள, அம்மொழி தங்களை இரண்டாந்தரக் குடிகளாக ஆக்கிவிடுப என்று ஐயுறுகின்றனர். இவர்களின் ஐயத்தில் பொருள் உள்ளது என்பதுதான் உண்மை.

இதே ஐயந்தான், இரண்டாம் உலகப் போர் முடிந்த பின் பெல்சியய நாட்டில் உள்ள பிரெஞ்சு மொழி பேசும் வாலூன் (Wallons) மக்களுக்கும், டச்சு மொழி பேசும் பிளெமிங் (Fleming) மக்களுக்குமிடையே பல ஆண்டுகட்குப் பெரும் போராட்டம் நிகழக் கரணியமாயிருந்தது இறுதியில் இரண்டு மொழிகளுக்குமே இணையுரிமை அளிக்கப்பட்டு, நாட்டின் ஒற்றுமை காக்கப்பட்டது.

இதே ஐயந்தான் கனடா நாட்டில் உள்ள ஆங்கிலேயர்கட்கும், பிரெஞ்சு மொழி பேசும் கியூபெக் (Quebec) பகுதி மக்களுக்கும் பெரும நீண்டகாலப் போராட்டம் நிகழக் கரணியமாயிருந்தது. இறுதியில் பிரெஞ்சு மொழிக்கு ஆங்கிலத்திற்கிணையான உரிமை அளித்து, நாடு பிளவுபடுவது தவிர்க்கப்பட்டது.

இதே ஐயந்தான், சோவியத்து நாட்டில் உள்ள சார்சியா (Georgia) குடியரசில், சார்சியா மொழியை நீக்கி விட்டு உருசிய மொழியை ஆட்சிமொழியாகக் கொணடு வந்த போது, சார்சியா மக்கள் கிளர்ந்தெழுந்து பெரும் புரட்சி செய்யக் கரணியமாயிருந்தது. மக்களின் எதிர்ப்பு வேகத்தைக் கண்டு அயர்ந்த ஆட்சியாளர், சார்சியா மொழியையே மீண்டும் அரியணை ஏற்றினர். அரசினரின் திட்டத்தை எதிர்ப்பதென்பதையே அறிந்திராத ஒரு நாட்டில் மொழி உணர்வு எவ்வாறான எழுச்சியை உண்டு பண்ணியது என்பது கருதற்பாலது.

''Even in USSR, when the Soviet leadership planned to eliminate Georgian as the Offic al language of the multi-national republic, it ran into stiff and potentially dangerous oppo ition. In an unusual reversal, the authorities backed down and restored Georgian as the Official language in the Republic's new constituition' This rebellion took place in a country where 'the notion of a large public demonstration to protest against an official government policy is virtually unheard of' (Language trouble in Georgia - Indian Express—1-5-1978).

இதே ஐயந்தான் வங்காளம் பேசும் வங்கதேசம், உருது பேசும் பாக்கிசுத்தானிலிருந்து பரிந்து சென்றதற்குத் தலையாய கரணியமாயிருந்தது.

எனவே, அனைத்து மக்களுக்கும் இணையுரிமை அளிப்பதாக ஆட்சிமொழி அமையாவிடில், மாற்று மொழி பேசும் மக்கள் கிளர்ந்தெழுவர் என்பது வரலாறு காட்டும் உண்மையாகும்.

கூற்று 2:—

''தெலுங்கர்களும், மலையாளிகளும், கன்னடர்களும் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்டு, இந்தி கற்று வருகின்றார்கள் அவர்களெல்லாம மானம் இல்லாதவர்களா? நீங்கள் மட்டும் உயர்ந்தவர்களா ? அவர்களெல்லாம் உலகத்தோடு ஒத்து வாழத் தெரிந்தவர்கள்'' என்று திரு. செபமணி கூறுகிறார்.

உண்மை: —

தமிழர்கள் மட்டுமே இந்தியை எதிர்க்கிறார்கள் எனும் கூற்று வரலாறு அறியாமையை வெளிப்படுவதாகும். 1949-ஆம் ஆண்டு 'அரசியல் நிலைப்படுத்து அவை' (Consitituent Assembly)-யில் நடந்த கலந்துரையாடல் பற்றிய ஒரு குறிப்பைக் காண்போம்.

'திரு நசிருத்தின் அகமத் ஒருவரைத் தவிர, இந்தி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அனைவரும் இந்திக்காகப் போராடினார்கள் என்றும், இந்தி பேசாத பகுதியைச் சார்ந்த உறுப்பினர்கள் எவ்வளவு காலம் முடியுமோ அவ்வளவு காலம ஆங்கிலத்தை நீடிப்பதற்குப் போராடினார்கள் என்றும், அவர்களது பேச்சிலிருந்து தெரிகிறது. மைசூரைச் சேர்நத திரு. எசு. வி. கிருட்டிணமூர்த்திராவ் (S.V. Krishnamurthy Rao) பேசும் போது ஆங்கிலமே நீடிக்க வேண்டுமென்ற கருத்துப்பட 'இன்றுள்ள நிலைமையை மாற்றாது நீடிக்க வேண்டும்' என்றும் மொழிச் சிக்கலை எதிர்கால பாராளுமன்றத்தின் தீர்ப்புக்கு விட்டுவிட வேண்டும என்றும் கூறினார்'' (இந்தியாவின் மொழிச் சிக்கல் - பக்கம் —38—மோகன் குமாரமங்கலம்).

இதிலிருந்து இந்தி மொழி பேசாத மற்ற அனைத்து மாநிலங்களிலிருந்தும சென்றிருந்த தலைவர்கள அனைவரும் ஒத்த குரலில் இந்தியை எதிர்த்து முழக்கமிட்டுள்ளனர் என்று தெளிவாகிறது. ஏனெனில், இநதி ஆட்சி மொழியாக ஏற்கப்படுவதன் பின் விளைவுகளின் கொடுமைகளைப் பற்றி அவர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

இம் மாநிலங்களில் இன்று இந்திக் கல்வி நடைமுறையில் இருப்பதன் கரணியம், அம்மக்களை உறங்க வைத்து உடல் வளர்க்கும் அரசியலாளர்களின் குரலைவிட, மக்களை விழிப்படையச் செய்ய எண்ணும், மேற்படி உண்மைகள் அறிந்த ஆன்றோரின் குரல் உரத்து ஒலிக்க இயலாதது தான். வருங்காலம் இதன் தீய விளைவுகளை உணர்த்தும்.

கூற்று: 3—

'' கன்னடத்தவர்களும், மலையாளிகளும், தெலுங்கர்களும் மும்மொழியை ஏற்று, மூன்று மொழிகளையும் கற்றுப் பயனடைகிறார்கள். தமிழர்களாகிய நாம் மட்டும் ஆங்கிலமும், தமிழும் கற்றுத் தமிழ்நாட்டுக்குள்ளேயே குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டுகிறோம்'' என்று திரு, செபமணி கூறுகிறார்.

உண்மை: —

மேற்படி மூன்று மாநிலத்தவரும் என்ன பயன் அடைந்தார்கள் என்று இவர் சொல்வாரா? இந்திப் படிப்போருக்கு வடநாட்டில் வேலை கிட்டும் என்று சொல்வது ஒரு மாயை. வட மாநிலங்களிலேயே இலக்கக் கணக்கானோர் வேலையின்றி வாடுகையில் தென்னகத்திலிருந்து இந்தி கற்றுச்செல்வோர் அனைவருக்கும் வடநாடு எங்கிருந்து

(8-ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்நாடு பாலைநிலமாக மாறிக் கொண்டு இருக்கிறது!

காடுகள் பரவலாக அழிக்கப்படுவதை உடனடியாக விரைந்து தடுக்காவிடில், தென்னிந்தியா 'தார்' போன்று பாலைநிலமாக மாறிவிடுமென நகரச் சுழற்கழகத்தின் இயக்குநர் பர். இரெசுமி மாயூர் அண்மையில் புதுத் தில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். மேலும் அவர் கூறியதாவது:

குறிப்பாகத் தமிழ்நாடு, கேரள மாநிலங்களில் காடுகளைக் காக்கத் தவறினால் ஆண்டிற்காண்டு அப்பகுதிகளில் வறட்சி தீவிரமடையும். கி.பி. 1940-ஆம் ஆண்டிலிருந்த மரங்கள் மூன்றிலொரு பங்கு இன்று வரை அழிக்கப்பட்டதால் தான் கேரளத்தில் பருவகாலம் மாறுகின்றது. மழைக் குறைவும் ஏற்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளுக்கு முன் யானைக் கூட்டங்கள் வாழுமளவிற்கு இருந்த அடர்ந்த காட்டுப்பகுதியே, புறக்கணிப்பால் இன்று 'தார்' பாலையாக மாறிவிட்டது. உரோமானியப் பேரரசுக்கு உணவளித்த உருனிசியா, மரோக்கா காடுகளைக் காக்கத் தவறியமையால், இன்று அந்நாடுகள் தங்கள் உணவுத்தேவைகளை அறுபது விழுக்காடு வரை இறக்குமதியே செய்கின்றன. எனவே காடுகளை வளர்ப்பதிலும் நீரைச் சிக்கனப்படுத்துவதிலும் கவனமாக இல்லாவிடின் தமிழ்நாடு பாலைநிலமாக மாறிவிடும்.

தமிழக அரசு இவ்வெச்சரிக்கையினை அருள் கூர்ந்து மனத்திலிருத்தித் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுகிறோம்.

○

தமிழ் நாட்டரசு அடக்குமுறை அரசாக மாறி வருகிறது என மாந்த உரிமைக் காபபுக் கழகம் அண்மையில் புதுத்தில்லியில் வெளியிட்டுள்ள அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளது. அதற்குக் கரணியங்களாகக் கீழ்க் கண்டவற்றை அவ்வறிக்கையில் வெளியிட்டுள்ளது.

1. தமிழ்நாட்டில் வடார்க்காடு, தகடூர் மாவட்டங்களில் இதுவரை உயிரிழந்த முப்பத்தாறு பேர்களில் பெரும்பாலானோர் காவலர் பொறுப்பில் (சிறையில்) இருந்த காலத்திலேயே மாண்டனர்.

2. ஏழைகள் ஒடுக்கப்பட்டோரின் பொருளியல், குமுகாய நிலைக் கோரிக்கைகளுக்கு அவர்களின் மேல் 'நாட்டுப் பகை' என குற்றஞ் சாட்டப்படுகிறது

3. துடிப்புமிக்க இளைஞர்கள், குமுகாயப் பணிகளில் ஈடுபடுவோர் காவலரால் கொடுமையாய்த் துன்புறுத்தப்படுகின்றனர்.

4. அப்பகுதிகளில் வன்முறையாளர்கள் கும்பலாக உள்ளனர் என அரசு அச்சங்காட்டி கடுமையான அடக்குமுறையினைக் கட்டவிழ்த்து விடுகின்றது

தமிழக அரசு அருள் நோக்குடன் காவல் துறையினைச் செப்பமாக வைத்திருக்க வேண்டுமெனவும், ஏழை, எளிய மக்களை வளமிக்கவர்களின் சொற்கேட்டுத் துன்புறுத்த வேண்டாமெனவும் அன்புடன் வேண்டுகிறோம்.

- வல்லுநர் எச்சரிக்கை

பார்ப்பனர் இருந்துவிட்டால்...!

பானதும் ஆகும். ஆனால் தமிழ்நாட்டின் இன்றைய சூழ்நிலையில் அதைச் சரியென்று ஏற்கவேண்டுமானால் பார்ப்பனர்கள் இந்தியத் தேசியத்தை மறந்து, தமிழ் இனத் தேசியத்தைப் போற்றவேண்டும். இவர்களைத் திட்டுவதும் தூற்றுவதும் நிறுத்தப்படவேண்டுமாயின், இவர்கள் காரணமாக இருந்து தமிழினத்திற்கும், மொழிக்கும் ஏற்பட்ட அனைத்து நலிவுகளையும், தாழ்வுகளையும் இவர்களே முன்வந்து களைய வேண்டும்.

தமிழினம் அடிமைப்பட்டுச் சில நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. 'இந்தியன்' என்று அடையாளமும் அவனுக்குப் புறமானதே. எந்த ஓர் இனத்திற்கும் அவ்வினத்தையும் அதன் மொழியையும் ஒட்டித்தான் இயல்பாக இயற்கையாக நாடும் அடையாளமும் அமையும். தமிழருக்கு அவ்வாறு அமையவில்லை. இந்தியத் துணைக் கண்டத்தின் விடுதலையின் போது, கல்வியறிவு பெற்றிருந்தோர் பார்ப்பனர்களே. அரசியல், குமுகம் சமயம், கல்வி, அறநெறி, ஆட்சி முதலிய அனைத்துத் துறைகளிலும் இவர்களின் ஆளுமை முற்றுகையிருந்தது. இத்தனையும் மன்னித்து, மறந்து தமிழராகவே இவர்களை ஏற்பதுமின்றி, மிகவும் போற்றிப் புகழ்ந்திருக்கலாம்! — இந்திய விடுதலையுடன், தமிழ் இனத்தின், தமிழ்நிலத்தின் விடுதலையையும் இவர்கள் எண்ணிச் செயல்பட்டு விளைவேற்படுத்தியிருந்தால்; ஆனால், செய்யவில்லை!

தமிழராக மாறினால் பாராட்டலாம்!

ஆயினும். இன்று பார்ப்பனரல்லாத பல தமிழ்க் குமுகத்தினரும் தமிழ்நாட்டில் விழிப்புணர்வும் எழுச்சியும் பெற்றுவரும்போது. அதற்கு உதவியாக உறுதுணையாகவேனும் இவர்களில் கற்றோரும், எழுத்துத் துறையில் உள்ளோரும், செய்தியேட்டுத் துறையில் உள்ளோரும் செயல்படலாம்.

இஃது அவர்களுக்கோர் வாய்ப்பு. அவர்களில்பலரும் ஆனந்தீசுவரன்களாக, கீதாக்களாக, வாஞ்சிநாதன்களாக மாறிவிட்டால், உறுதியாக நாம் அவர்களைத் திட்டவும் மாட்டோம். அப்படித் திட்டுபவர்களைத் திருத்தவும் செய்யலாம்.

மடல் 2 எழுதியவர்: தமிழநேயன், புதுவை.

பார்ப்பனர்கள் தமிழுக்குச் செய்த, செய்துவரும் அழிம்புகளை எண்ணுங்கால் தமிழர்கள் எவரும் அவர்களைச் சாடத்தான் செய்வர். தமிழ்நிலத்தில் இருந்து கொண்டு தமிழைக் கருவறையில் நுழையவிட மறுப்பதும் சமசுக்கிருத பல்லவி பாடுவதும் யாரே பொறுப்பர்? அவர்தம் தமிழ்மொழி, இனப்பகைமை வெளிப்படையானதன்றோ. ஆயின், திரு. அறிவின்பன் (போர்ட்பிளேயர்) எடுத்துக்காட்டுவது போல எங்கோ ஓரிரு பார்ப்பனர் இன, மொழிப் பற்றோடு இருக்கலாம். அதுவும் குறிப்பாக, பிற மாநிலத்தில் தமிழகப் பார்ப்பனர் துணையில்லாதவர் அவ்வாறு இருப்பதில் வியப்பில்லை. ஒருவர் தமிழகத்தில் பிறந்து வளர்வதாலோ தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பதனாலோ தமிழராகார். மாறாகத் தமிழ் மொழி– இன உணர்வுடன் தமிழ்மொழிக்கும் இனத்திற்கும் பாடுபடுவரே, ஏற்றம் தருபவரே உண்மைத் தமிழர் ஆவர்.

தமிழகத்தில் பிறந்து தமிழால் வளர்ந்து தமிழையே அழிக்கும் வையாபுரிகள் இல்லையா? அயல்நாட்டில் பிறந்து தமிழகம் போந்து தமிழ் பயின்று தமிழை உயர்த்திய கால்டுவல் போன்றோர் இல்லையா? பாவாணர் கூற்றுப்படி கால்டுவல்லும் ஒரு தமிழர் தாமே. அவ்வாறாயின் மொழிக்கும் இனத்திற்கும் கரவில்லாமல் ஒரு பார்ப்பனர் பாடுபடுவாராயின் அவரும் தமிழரன்றோ? அவரை யாரே தூற்றுவர்? இத்தகைய, விரல்விட்டு எண்ணக்கூடிய எண்ணிக்கையினரை வைத்துக் கொண்டு பார்ப்பனர்கள் அனைவரும் தமிழ்மொழிப்பற்றும் இனப்பற்றும் உடையவர்கள் என்று ஒட்டுமொத்தமாகக் கூறுவது சரியாமோ? எண்ணிப் பார்க்க.

நாம், இன உணர்வுடைய ஓரிரு பார்ப்பனர்களைப் பாராட்டுகிறோம். அத்தகையோரை நாம் பார்ப்பனர்கள் என்று கொள்வதற்கு மாறாகப் பச்சைத் தமிழர்களாகவே மதிக்கிறோம்.

மடல் 3 எழுதியவர்: அருண்மொழியன். முகவை

தண்தமிழ்நாட்டின் தனிக்கதிரொளியே! பாவலரேற்றிற்கு வணக்கம். தமிழ்நிலம் இதழ் மிகவும் கணங்கிக் கிடைக்கின்றது. இதழில் எழுதப்பெற்றிருந்த கர[illegible]யங் கண்டு ஆறுதலடைந்தேன். அரசியல் கேடர்களாலும் திரைப்பட இழிஞர்களாலும் சமயக் கொலைஞர்களாலும் அலைக்கழிக்கப்பட்டுவரும் இந்தத் தமிழினத்தைத எப்படியும் கடைதேற்ற ஒரேவழி அவர்கட்கு அடி கொடுத்தாவது நல்வழிப்படுத்த வேண்டும் என்பதுதான். தமிழ்நிலம் இதழ் எண் 13-இல் சொல்லப்பட்டுள்ள கருத்துகள் என்னைக் கவர்ந்தன. தமிழ்த்திரு மாசி அண்ணுமலை அவர்களிடம் உரையாடுங்கால், உ.த.மு.கவில் இளைஞர் இயக்கம் ஒன்றைத் தொடங்கி அவர்கட்கு நாட்டு நலம் கருதக் கட்டுப்பாடான சில இயக்க நெறிகளையும் பயிற்சிகளையும் பயிற்றுவித்தல் நலம் என அண்ணுமலையார் வேண்டவும் அதுபற்றிய எண்ணம் எனக்கு உண்டு. அது படிப்படியாகச் செயல்படுத்தப்படும் என்று திரு. பாவலரேறுவாகிய தாங்கள் மறுமொழி தந்ததும் என்னை ஈர்த்தன. உ.த.மு.கவில் உள்ளோர் பெரும்பாலோர் இளைஞர்கள். ஆகையால் இதை எளிதில் செயல்படுத்தமுடியும். விரைந்து செயல்படுத்தவும் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன். கண்ணை விழித்துக் கொண்டே கிணற்றில் விழ இருப்பவனைச் சொல்லித் திருத்தலாம். அப்படியும் திருந்தவில்லையெனில் அவனை அடித்துத்தான் திருத்தவேண்டும். அடித்துத் திருத்தப்படவேண்டிய நிலையில் தான் இன்று தமிழினம் உள்ளது. இனம் கெடுக்கும் இழிஞர்கள் திருந்துவார்கள் எனக் காலத்தை எதிர் நோக்கல் நம் வாணுளைச் செலவழிப்பதாகும்.

பார்ப்பனரை ஒட்டுமொத்தமாக இனஞ்சுட்டித் திட்டுவது சரிதானு?' என நண்பர் போர்ட்பிளேயர் அறிவின்பன் எழுதியிருந்தார். நல்ல கட்டுரை பார்ப்பனர்களில் சிலர் நல்லவர்களாக நம் நலம் நாடுபவர்களாகவும் நம்மவர்களில் பலர் காட்டிக் கொடுப்பவர்களாகப் பணம் பெற்றுக்கொண்டு இனக்கீழறுப்பவர்களாகவும் நடந்துதாம் வருகின்றார்கள். என்றாலும் நாய்வாலை நிமிர்த்த முடியாததுபோல் பார்ப்பனர்கள் நம் தமிழ்மொழியை வீட்டு மொழியாகப் பேசி வந்தாலும், வடமொழி வணக்கத்தைத் தொடர்ந்து செய்துதான் வருகின்றனர். தமிழ் உயர்ந்தது வடமொழி தாழ்ந்தது என்றில்லாவிட்டாலும், தமிழைவிடச் சற்றுக் குறைந்த மொழி என்பதை எந்தப் பார்ப்பனரும் ஒத்துக்கொள்வதில்லை. அது தஞ்சாவூர் பார்ப்பனராக இருந்தாலும் சரி அல்லது தெலுங்கு, கன்னடப் பார்ப்பனராக இருந்தாலும் சரி. அவர்கள் தமிழின நலம் நாடல் என்பது அதில் அவர்கட்கு ஏதேனும் பயன் கிடைத்தற் பொருட்டே. கடல் கடந்து வாழும் பார்ப்பனர்கள் தமிழ் மன்றங்கள் வைத்து நடத்துதல் எலி வளை தோண்ட அரவம் வாழ்வது போன்றதே. தமிழ்மன்றம் என்னும் பெயரில் வடமொழி வளர்ப்பும் தமிழ்மன்றத்திற்குப் பணம் திரட்டி அவாள் தேவமொழியை வளர்ச்சியுறச் செய்யவேண்டுவதே. இதை நண்பர் தனித்திருந்து எண்ணிப் பார்ப்பாராக. கோவிலில் மணியடிக்கும் பார்ப்பனரில் இருந்து முதனிலை அதிகாரியாய்க் கொலுவீற்றிருக்கும் பார்ப்பனர்வரை தமிழ்நாட்டை, மொழியை தாங்கள் கடைநிலையிலேயே வைத்துள்ளனர். இல்லாவிட்டால் பொதுவுடைமையில் புகுந்து அங்கும் தனிவுடைமைக்கு ஆள் சேர்ப்பார்களா? எனவே நண்பரும் எல்லோரும் எண்ணிப் பார்க்க.

இருந்தாலும் பார்ப்பனரைவிட அதிக நஞ்சுள்ளவர்கள் இன்று தமிழினத்தில் இருக்கின்றார்கள். இஃது உடனிருந்தே கொல்லும் பேய். சாதி சமய வெறிபிடித்து அலைவர் எல்லோரும் இன்று தமிழர்களே. தமிழ்நாட்டில் ஆர்.எசு. எசுலேயே நுழைந்து அதில் பயிற்சிபெற்று வருபவர்கள் முழுக்க முழுக்கத் தமிழர்களே. சென்ற 1981-இல் இராமேசுவரத்தில் நடந்த திராவிடர் கழக இன எழுச்சி மாநாட்டை நடக்க விடாமல் என்னென்ன செய்யவேண்டுமோ எல்லாம் செய்தவர்கள் தமிழர்களே. எனவே தமிழன் கடைசிவரை இனக் கீழறுப்புச் செய்து கொண்டேயிருப்பான்.

மடல் 4 எழுதியவர்: தென்மொழி அரங்க தமிழ்மணி கோவை.

அன்புடையீர், தமிழ்நிலம் இதழ் எண் : 13 பகுதி : 16-17 இதழில், நண்பர் அறிவின்பன் அவர்கள் எழுதிய 'பார்ப்பனரை ஒட்டுமொத்தமாக இனஞ் சுட்டித் திட்டுவது சரிதானு?' எனும் தலைப்பில் வெளியான மடலைப் பார்த்ததும், நண்பர் அறிவின்பன் அவர்கள் பார்ப்பனர்களுக்காக வழங்கும் பரிந்துரையைப் பார்த்துச் சிரிப்புத்தான் வந்தது.

எங்கோ ஒரு பார்ப்பனர் அப் பகுதியில் (போர்ட்பிளேயர்) வாழும் தமிழினத்தில் ஒரு சிலருக்குச் சில நன்மைகளைச் செய்தார் என்பதற்காகப் பார்ப்பன இனத்திற்கே பரிந்து பேசுவது அறிவின்மையாகும். ஒரு பார்ப்பனர் (வாஞ்சிநாத ஐயர்) செய்த நன்மைக்காக அந்தப் பார்ப்பனரும் தமிழின நலன் கருதி மட்டுமே நன்மை செய்திருக்க முடியாது என்பதை அவரின் உள்முக நடவடிக்கைகளைப் பார்த்தால் புரியும்.) செய்த நன்மைக்காக (அப்படியே நன்மை செய்ததாகவே இருந்தாலும்) அப்பார்ப்பன இனத்தையே திட்டக்கூடாது என்றால், அவர்களின் காலில் விழுந்து நாம் வணங்கலாமா? நம்மைச் சூத்திரர்கள் என்று ஒப்புக் கொண்டு அவர்களைத் தேவர்களாக வழிபடலாமா? கோயில் கருவறைக்குள் உள்ள சிலைகளை எல்லாம் எடுத்துக் கடலில் வீசிவிட்டு, அதற்குப் பகரமாகப் பார்ப்பனர்களை அமரவைத்துத் தமிழர்களைக் குடமுழுக்கு நடத்தச் சொல்லி மூடத்தனத்தின் முடை நாற்றம் வீசும்படி செய்யலாமா? அல்லது தமிழர் அனைவரும் பார்ப்பனர்களாகி அவர்கள் உண்டு வீசும் எச்சில் இலைக்கு ஏங்கித்திரியும் சொரி நாய்களாக மாறித் தெருத் தெருவாக அலையலாமா? (ஏற்கனவே அடிமைத் தமிழன் அப்படித்தான் உள்ளான்).

ஈராயிரமாண்டுகளுக்கும் மேலாக இத்தமிழினம், தன்னுணர்விழந்து, அறிவிலியாய், ஏதிலியாய் இருந்து, பார்ப்பனீயச் சுரண்டலுக்குத் தமிழினத்தையே ஈகம் செய்து வருகிறார்களே அவர்களை என்னவென்று பாராட்டுவது? எப்படிப் பரிந்துரை செய்வது? யார் பரிந்து பேசுவது? அன்றாட வாழ்வியல் நிலைகளிலேயே, பார்ப்பனீயத்தின் வல்லாண்மையால் தமிழர் படும்பாடு சொல்லி முடியாது. அதையும் உணரமுடியாவிட்டால் தொடக்கக் காலத்திலிருந்து வெளிவந்த 'தென்மொழி'யைப் படித்தாலே புரியும் புரிந்திருந்தால், உணர்ந்திருந்தால் பின்ஏன் இப்படிப்பட்ட மடல் எழுத எண்ணம் வந்தது? யார் தூண்டுதல் பேரால் எழுதியது? இப்படிப்பட்ட மடல்கள் நம்மவர்களிடமிருந்தே நம்மவர்களுக்கு எழுதத் தூண்டும் திறன் பார்ப்பனியத்திற்குத் தான் உண்டு.

பிற இனத்தின் நலனுக்காக, அதுவும், தனக்கு முற்றிலும், எல்லாவகையிலும் எதிரான ஓர் இனத்திற்காகத் தமக்குள்ளே சண்டையிட்டுக் கொண்டு, மாற்றானிடம் அடிமையாய் (பல நூற்றாண்டுகளாக) வாழும் ஓர் இனம் உலகிலேயே தமிழினம் ஒன்றுதான். ஆகவே. பார்ப்பனக் கரவான எண்ணங்களுக்குப் பலியாகி, நம்மையே ஏமாற்றும் நம்மவரைத் தான் முதலில் சொல்லித் திருத்த வேண்டும். இப்போது பார்ப்பனரைவிட நம்மவர்கள்தாம் நமக்குப் பகைவராக உள்ளனர். நம்மை நாமேதாம் ஆரிய வல்லாண்மையினரின் படுகுழியில் தள்ளிக் கொள்கிறோம். அதிலிருந்து நம்மை மீட்டெடுக்கப் பெருஞ்சித்திரனர் ஒருவர்தான் உண்டு. அவரால்தான் ஆரியத்திற்குப் பலியாகாமல் தமிழினத்தைக் காப்பாற்றமுடியுமென்பதை அன்பர்கள்உணர்வார்களாக

வள்ளுவன் அகிலா

தீவிரப் பொதுவுடைமையாளர் (மார்க்சியஇலெனினியம்) திரு. வள்ளுவனுக்கும், செல்வி அகிலாவிற்கும் 22-9-82 அன்று நடந்த திருமணத்திற்குப் பின் பாவலரேறு அவர்களின் தலைமையில் 13-1-83 அன்று நடந்த வரவேற்பின்பொழுது எடுக்கப்பட்ட படம்.

மடல் 5 எழுதியவர் பி.தமிழரவம் மதுரை

தமிழ்நிலத்தின் மொழியியல் தலைவரேவணக்கம். 27-2-83-ஆம் பக்கல் 'தமிழ்நிலத்தில்' போர்ட்பிளேயர் தோழர் அறிவின்பன் அவர்கள் 'பார்ப்பனரைப் பற்றி ஒட்டுமொத்தமாக இனஞ்சுட்டித் திட்டுவது சரிதானு'? என்ற தலைப்பில் எழுதியதைப் படித்தேன். அஃது அவர்களுடைய சொந்தக் கருத்தாக இருக்கலாம்; இன்றைய நிலையில் பொருந்தாத கருத்து.

அந்தமானில் இருந்து இன்றைய தமிழகத்தின் அன்றாட நடைமுறைச் சிக்கலைப் பார்ப்பன வல்லாண்மையை அறிந்து கொள்ள இயலாது. காந்தியடிகளும், தலைவர் தந்தை பெரியாரும் ஒருமுறை உரையாடும்பொழுது காந்தி பெரியாரிடம் நீங்கள் ஏன் பார்ப்பனர்களைச் சாடுகிறீர்கள், அவர்களில் ஒருசில நல்லவர்கள்கூட இல்லையா? என்று கேட்டபொழுது, பெரியார், 'நீங்களே கூறுங்கள் ஒருவரை' என்று கேட்டார். உடனே காந்தி திலகரைக் கூறினர். பின்பு பெரியார், 'நீங்கள் 'மகாத்மா' நானே 'சாதாரண ஆத்மா' உங்கள் கண்ணுக்கே இந்தியாவில் ஒரு பார்ப்பனர் தெரிகிறார் என்றால், எனக்கு யாரையும் தெரியவில்லை, என்றார். என்ற பழைய செய்தியை அறியவும். இந்தக் கிழமை 'சூனியர் விகடன்' இதழில் பார்ப்பனப் பெண் நேருரையும், திருச்செந்தூர் தேர்தலில் நகரப் பார்ப்பன ஒப்போலைகள் அனைத்தும் அந்த இனத்திற்கு ஒட்டுமொத்தச் சார்பாளரான முதல்வர் ம.கோ.இரா. அவர்களுக்கு அளித்ததும், மறக்க இயலாத செயல்கள். ஒருசில பார்ப்பனர்கள் இப்படி இருப்பதை நாம் அரவணைப்பது என்பதை ஏற்றாலும், நம்மிடை உள்ள இரண்டகர்களைப் பார்ப்பனர்கள் அரவணைப்பது போன்றதாகும், நமது செயல்.

'தமிழ் நிலம்'

உ. த. மு. க. கிழமை – இதழ் சென்னை-5.

1.	தனியிதழ்	விலை உரு. 0. 65
2.	ஆண்டுக் கட்டணம்	உரு. 36. 00
3.	அரையாண்டுக் கட்டணம்	உரு. 18. 00

ஓரிதழுக்கு உரு. 4.00 மேனி முன் பணம் கட்டும் முகவர்கள் எழுதிக் கேட்க.

தொடர்புக்கு : தமிழ் நிலம், 5, அருணுசலத்தெரு, சென்னை-5.

தமிழ்நாட்டில் உள்ள தொழிலாளர் கழகங்கள் தமிழ்மொழி, இன, நாட்டு முன்னேற்றம் கருதுபவையா?

தமிழ்நாட்டில் மாநில அரசிலும் சரி, நடுவண் அரசிலும் சரி, எத்தனையோ திணைக்களங்கள் உள்ளன. ஒவ்வொரு திணைக்களத்திலும் பணியாற்றும் ஊழியர்களில் ஒவ்வொரு படிநிலையினருக்கும் என்று தனித்தனிக் கழகங்கள் உள்ளன. அவை அரசியற்கட்சி வழி ஒவ்வொரு படிநிலையினருக்கும் பல கழகங்களாக உள்ளன.

தொழிலாளர் நலம் ஒன்றை மட்டும் கருத்தில் கொண்டு அமைக்கப்படுமேல் இப்படிப் பல கழகங்கள் தேவையில்லை. கழகத்தலைவர்கட்குள் ஏற்படும் மேலாண்மைப் போட்டி காரணியமாக அவை பலவேறு கழகங்களாகச் சிதற அடிக்கப்படுகின்றன. தொழிலாளர்களின் உரிமைக் குரலை அவர்களின் வேண்டுதல்களை, கிடைக்க வேண்டிய நயன்மைகளை ஒரு கழகம் கொண்டு சென்று போராடுமெனின் மற்றொரு கழகத் தினரைக் கொண்டு நேராகவோ அன்றிக் கரவாகவோ அரசு முறியடிப்பது நடந்துதான் வருகிறது. தொழிலாளர் நலன் கருதி உண்மையிலேயே செயல்படும் ஒரு சிலரைப் பழிவாங்கி அலைக்கழித்தான் இப்படிப் பலவேறு அமைப்புகள் துணை செய்கின்றன.

ஆமை, நுழைந்த வீடு உருப்படாது என்பர். ஆமை நுழைந்த வீடு உருப்படுமோ இல்லையோ பிராமணியம் நுழைந்த எந்தவோர் இயக்கமும் உருப்படுதல் இல்லை.

பிராமணியத்தை எடுத்துச் செல்பவன் பிராமணனாகவும் இருக்கலாம்; தமிழனாகவும் இருக்கலாம். இந்தப் பிராமணியம் தான் தொழிலாளர் நல அமைப்புகளிலும் புகுந்து கொண்டு அவர்தம் நலன்களைச் சிதைப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

நம்நாட்டுத் தொழிலாளர்களில் பலவகையினர் உண்டு. அலுவலகங்களில் சம்பளம் அதிகமாக வாங்கிக் கொண்டு மடிப்புக்கலையாத மாசு தூசு படாத உடைகளை உடுத்திக் கொண்டு வளிக்கட்டுப்பாட்டு அறையிலாயினும் சரி, எந்நேரமும் காற்று வீசக்கூடிய மின்விசிறி சுழலும் அறையிலாயினும் சரி, ஒப்புக்குப் பணியாற்றும் உயர் அலுவலர்கள் ஒருவகை.

கன்னெய் ஏறி ஏறி அழுக்கடைந்த காற்றை, மேற்பை சட்டுள், தன் உடலை நனைத்துக் கொண்டு என்புருக்கி நோயையோ ஈளைநோயையோ உண்டாக்கும் நச்சுப் புகைகட்கு நடுவில் சிக்கித் தவித்து, இவ்வுலகில் நாமும் உயிர் வாழ வேண்டுமே என்று பொறிகட்குள் அகப்பட்டு, அதனைக் கட்டுப்படுத்தும் பணிசெய்து, பணிவிட்டதும் உழைப்பின் கடுமையை உணராதிருக்க வலியைப் போக்கலாம் என்றெண்ணி வெறிநீர் குடித்துக் கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னை அழித்து வரும் கீழ்நிலைப் பணியாளர்கள் ஒருவகை.

இவை இரண்டிலும் சேராது விலாங்குமீனைப் போலிருக்கும் நடு அலுவலர்கள் ஒருவகை.

இவர்கட்குப் பாடுபடுவதாகக் கூறிக் கொண்டு எல்லாப் பிரிவினரிடமும் உறுப்பாண்மைக் கட்டணம் வாங்கிக்கொண்டு அந்தப் பணத்தைத் தம் ஊதாரிச் செலவுகட்கு வார்க்கும் பிராமணியத் தலைவர்கள் தாம் இன்று தொழிலாளர் நலக் கழகங்களின் தலைவர்களாய் அரசோச்சுகின்றனர். உண்மையிலேயே தொழிலாளர் நலம் நாடும் ஓரிரண்டு தமிழர்களை ஒவ்வொரு பிரிவினரிடமும் ஒவ்வொரு காரணியத்தைச் சொல்லி நடக்கின்ற தேர்தல்களில் பிரித்தாளும் சூழ்ச்சியால் தாங்கள் தலைமைப் பொறுப்புகளில் அமர்ந்து கொள்கின்றனர். அதிகாரிகளிடமோ அன்றி அரசிடமோ கரவாகப் பணம் பெற்றுக் கொண்டு, ஊழியர்களின் நலனுக்குப் பாடுபடுவதாகச் சொல்லி, ஒவ்வொரு கழகத்திற்கும் ஒவ்வோர் இதழ் நடத்தி அறிவிப்புச் செய்கின்றனர். இப்படித் தலைமைப் பொறுப்பில் இருக்கும் இத் தலைவர்கள் தமிழின முன்னேற்றத்தையா நாடுவார்கள்? தமிழின முன்னேற்றத்தை எவ்வளவுக்கெவ்வளவு தரைமட்டமாக்க முடியுமோ அவ்வளவும் செய்கின்றனர். 'பாடுபடும் தொழிலாளிக்குச் சாதியில்லை; மதம் இல்லை; மொழியில்லை; இனம் இல்லை. ஆனால் கொள்கை உண்டு; முழக்கம் உண்டு'.

ஒவ்வொரு கூட்டத்திலும் அல்லது ஊர்வலத்திலும் மேலே கூறப்பட்ட உரைகள் வானைப் பிளக்கும்; ஆனால் 'என்னய்யா' நமதுசாதி ஆள் அதிகாரியாக இருந்தும் நமது சாதிக்காரர்கட்கு ஒன்றும் செய்யமாட்டேன் என்கிறாரே, 'நமது சாதிக்காரர் அதிகாரி அவரைத் தாக்கி உரக்கப் பேசாதே' இஃது அவர்கள் இடையில் வரும் வெடிப்பொலிகள். எப்படி இந்தத் தொழிலாளர் நல இயக்கங்கள், தமிழின, மொழி, நாட்டு முன்னேற்றம் காணும்? ஊர்வல உரையில் தமிழே, இராது. நம்மைப் போன்றோர் தமிழில் நல்ல உரைகள் எழுதிக் கொடுத்தால் அது மக்கட்குப் புரியாதாம். ஆனால் 'சிந்தாபாத்' என்றால் புரியுமாம். இந்தத் தொழிலாளர் இயக்கங்களை வைத்துக் கொண்டு தமிழின விடுதலைக் குரலைக் கொடுக்க முடியாது.

மாநில அரசுப் பணியாளர்களோ பல அரசியல் கட்சியின் அடிப்படையில், அமைப்புகள் கொண்டுள்ளனர். இன்றைய தமிழக இந்திய அரசியற் கேடர்களின் வழியில் மக்கள் கண்மண் தெரியாது அழைத்துச் செல்லப்படுகின்றனர். ஆக நரியூரைக் காட்டிலும் எலியூர் தாழ்விலைபோல் மாநில அரசுத் தொழிலாளர் கழகங்களைக் காட்டிலும் நடுவண் அரசுத் தொழிலாளர் கழகங்கள் ஓரளவு சீரிய முறையோடு செயல்படுகின்றன. என்ன சொல்லி என்ன, இந்தத் தமிழ் மண்ணை நாம் கொஞ்சம் கொஞ்சமாக அயலானுக்கு அாளிக் கொடுப்பதைத் தடுக்க, இந்த இயக்கங்கள் துளியும் பயன்படா.

தொழிலாளரை வைத்துப் புரட்சி செய்து ஒரு தொழிலாளர் நல அரசை அமைத்த உருசிய நாட்டிற்கும் இந்தத் தமிழகத்திற்கும் உள்ள இடைவெளி முடிவில்லாதது. பின் எதைக் கொண்டு யாரைக் கொண்டு தமிழக விடுதலையை அமைத்தல் இயலும்? ஒருவேளை தமிழக உழவர் பேரணியைக் கொண்டு அமைத்தல் முடியுமா? ஆய்வு செய்ய வேண்டிய ஒன்று.

இங்குள்ள எல்லா இயக்கங்களும் ஆரியத்துடன் தன்னை இணைத்துக்கொள்வதிலும் மாநாடுகள் கூட்டி ஆரியப் பகைவர்களை அழைத்துப் பேசச் செய்வதிலுமே பெருமை பெறுகின்றன. திராவிடக் கழகத்தையும் அது பிடித்து ஆட்டுகின்ற தென்றால் வேறு எங்குபோய் முட்டிக் கொள்வது. தமிழக உழவர்களின் கைகளில் தமிழ்நிலத்தை வையுங்கள். இன்று தமிழ் இன்னும் உயிரோடு இருப்பது அவர்களால்தாம். நான் சொல்வது பெருநிலக்கிழார்கள் இல்லை. சிறுநிலக்கிழார்களும் இல்லை. உழவுத் தொழில் செய்யும் தமிழ் மக்கள். இதை ஆங்காங்குள்ள நம் உ.த.மு.க. அன்பர்கள்தாம் செய்ய வேண்டும். முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. அடிப்பார் அடித்தால் அம்மியும் அசையும்.

— மெய். அருண்மொழியன்.

அசாம் ...

பனிமலைக் கருகில்ஓர் பிணமலை எழுந்தது!
பாரெங்கும் பிணக்கொடு வாடை!
எரிந்தது மறைந்தது மாந்தநன் னேயம்!
எரிந்ததே இந்திய மாயை!

ஈட்டிகள் பேசின! அம்புகள் பேசின!
எரியெழுந் தாடிய(து) எங்கும்!
தீட்டிய வாள்கள் பேசின! பிணமழை
தொடங்கிய(து) உலுங்கிய(து) உலகம்!

மண்ணினை இழந்தும் வாழ்ந்திடும் புன்மைமேல்
வீழ்ந்ததோர் அணுவெடிக் குண்டு!
கண்ணினை விற்றிழி ஓவியம் வாங்கும்ஓர்
கயமையைத் துப்பினர் மென்று!

குமரிமாக் கடலும் குலுங்கிப் புரண்டது!
கொடும்பனி முடியும் இழிந்தது!
அமைவிலாப் புலியையும் ஆ(டு) அடித் துண்ணும்
அருவர லாறொன் றெழுந்தது!

மண்ணினைப் பறிக்கும் வாழ்வுமேற் கொண்டால்
வாழ்ந்திடு மோஉயர் நேயம்?
கண்ணினைத் தரினும் மண்தரு வாரோ?
காக்கவே களம்படைப் பாரே!

இரணியன்.

திட்டமிட்ட இந்தியெதிர்ப்பு நடவடிக்கை வேண்டும்!

வானொலியிலும், வானொளியிலும் திட்டமிட்டுத் தமிழை அழிக்கும் மறைமுக நோக்குடன் இந்தி, சமற்கிருத நிகழ்ச்சிக்கு அதிக நேரம் ஒதுக்குவதும், மேலும் புதுப்புது நிகழ்ச்சிகளைச் சேர்ப்பதுமாக உள்ளனர்.

இந்நிலையில் இந்திராகாந்தி அவர்கள் தமிழகத்தின் இந்தி எதிர்ப்பைத் தான் எற்கமுடியாது என்று கூறியிருப்பது இந்தித் திணிப்பாளர்க்குப் பச்சைக்கொடி காட்டியது ஆகும்.

தமிழகத்தைச் சமற்கிருத, இந்தி வல்லாளுமையிலிருந்து மீட்க அனைத்து மக்களையும் ஒன்றுபடுத்தி ஆவன செய்யும் முயற்சியில் 'தமிழ்நிலம்' முன்னோடியாக இருக்கவேண்டுமென விழைகிறேன்.

— பெ. மூத்துச்சாமி.
பவானி, பாவேந்தர் இலக்கியப் பேரவை.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு அந்தமானில் நடைபெறும்! பீசியில் நடைபெறாது! இர.ந. வீரப்பன் அறிவிப்பு!

பீசித்தீவில் 1983-இல் நடைபெறுவதாக இருந்த உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் மூன்றாவது மாநாடும், விழாவும் நடைபெறாது என அவ்வியக்கத்தின் தலைவர் திரு. இர. ந. வீரப்பன் அறிவித்திருக்கிறார்.

முன்னரே முடிவு செய்தவாறு, பீசியில் நிகழாவிட்டால் 1983 டிசம்பரில் அந்தமானில் நடைபெறவேண்டும் என்பதற்கிணங்கவே, இம்மாநாடு அந்தமான் தீவில் நடைபெறும் என்பதை அவர் தெளிவுபடுத்தினார். இவ்வாறான ஒருமுடிவு 1981 சனவரியில் இயக்கப் பேரவை மதுரையில் கூடியபோது எடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது என்றார் அவர்.

பீசியில் ஏன் திட்டமிட்டிருந்தவாறு அது நடக்கவில்லை என்பதற்கான காரணம், அத்தீவில் தமிழரையும் தமிழையும் அழித்துவரும் 'தென்னிந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கத் தலைமையகம் எடுத்த முடிவுதான். முதலில் இக்கழகம் ஒப்புக்கொண்டதைக் கடந்த மாதம் மாற்றிக்கொண்டு கையை விரித்துவிட்டது. தமிழரல்லாதாரின் ஆளுமை அக்கழகத்தில் கொடிகட்டிப் பறக்கிறது. ஐம்பதாயிரம் தமிழர்களை ஆயிரம் மலையாளிகளும் தெலுங்கர்களும் மேய்கிறார்கள்.

அந்தமானில் இம்மாநாடு நடைபெறக்கூடிய சூழல், அத்தீவுகள் ஏறத்தாழ மாறுபட்ட சூழலில் வேறுபட்ட சிக்கல்களில் பின்னடைந்துவிட்டன. அதனால் மூன்றும் மாநாடும், விழாவும் ஒருகிழமை நடக்கவேண்டும் என்று முன்னரே இயக்கத் தலைமையகத்துடன் உடன்பட்ட ஒன்றாகும்.

ஓர் இலக்கம் இந்தியர்கள் வாழும் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் 35 ஆயிரம் தமிழர் வாழ்கின்றனர். தமிழரில் தொண்ணூறு விழுக்காடு தொழிலாளிகளாவர். இயற்கைச் செல்வங்கள் நிறைந்த இங்கு வளமான தொழில்துறை வாய்ப்புகள் உள்ள நிலையில், இலங்கை மலையகத் தமிழர் ஓர் இலக்கம் பேரை இத்தீவுகளில் குடியேற்ற வேண்டும். ஏதிலிகளாக இப்போது தமிழகத்தில் தொல்லைப்படும் இவ்வேழைகளை அந்தமானில் மறு குடியேற்ற வேண்டும் என்பதை முன்னரே தமிழகத்திடம் இயக்கம் தெரிவித்திருந்தது. அது தமிழக முதல்வரால் ஏற்கப்பட்டு நடுவணரசிற்குப் பரிந்துரைத்தது. இப்போது சென்னையில் மலையகத் தமிழர் காப்பு மாநாட்டிலும் முழு முடிவுசெய்தவாறு தமிழகத்தில் அனைவரும் கட்சிசார்பின்றி இதனை ஒப்புக்கொள்கின்றனர். இந்தியா தனக்குச் சொந்தமான இத்தீவுகளில் மறு குடியேற்றம் செய்ய உடனடியாக முன் வரவேண்டும் என மீண்டும் தமிழக அரசு மூலம் வேண்டுகிறோம். இயக்கத் துணைத் தலைவர்களில் ஒருவரும், அந்தமான் முரசு கிழமை ஏடான 'அந்தமான் முரசு' பொறுப்பாசிரியருமான திரு. சுப. சுப்பிரமணியன் அந்தமான் கிளையின் அமைப்பாளர். மக்கள் கட்சித் தலைவரான திரு. க. கந்தசாமி உட்பட, கிளைத்தலைவர் திரு. கு. பால சுப்பிரமணியம் ஆகியோர் கொண்ட பேரவையினர் மாநாடு பற்றிக் கொள்கையளவில், ஒத்துக் கொண்டனர். இது குறித்தும் அங்குப் பொதுக்குழுவில் ஆய்ந்து வருகின்றனர். பிற செய்திகள் பின்னர் வெளிவரும்.

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 8-4-83 இதழ் எண்: 16 | 4 பகுதி 2021

மும்மொழித் திட்டம் இந்திக்கு முதன்மைதரும் திட்டமே!

அண்மையில் தலைமையமைச்சர் இந்திராகாந்தி மும்மொழித் திட்டத்தை மீண்டும் ஆதரித்தும் வலியுறுத்தியும் பேசியுள்ளார். இந்தத் திட்டத்தை அவர்கள் தொடக்கத்தில் அறிமுகப்படுத்தியதும், வலியுறுத்தியதும் இந்திமொழிக்கு முதன்மை தரவேண்டும் என்னும் நோக்கத்துடனேயே!

தாய்மொழி, தேசியமொழி, இணைப்புமொழி என்னும் அளவிலேயே மும்மொழித்திட்டம் அறிமுகப்படுத்தப் பெற்றது. ஆனால், இம் மூன்று மொழிகளுக்கும் சம உரிமை வழங்கப் பெறவில்லை. தாய்மொழி வழியாக ஒருவர் கல்வி கற்றால், அவர் அந்த மாநிலத்தின் எந்தப் பதவியிலும் அமர்வதற்குத் தகுதிபெற்றவராவார் என்று அறிவிக்கப் பெறவேண்டும். அது நடைமுறைப்படுத்தப் பெறவும் வேண்டும். ஆனால் நிலைமை அவ்வாறு இல்லை. ஒருவர் தம் தாய்மொழியில் கல்வி கற்பதற்குப் போதுமான வாய்ப்பே இன்னும் முழுஅளவில் மாநிலங்களில் உருவாகவில்லை. எனவே, தாய்மொழி வளர்ச்சி, இத்திட்டத்தால் குன்றவே செய்யும். ஒருவர் மூன்று மொழிகளையும் படிக்கவேண்டும். ஆனால் இந்தியும் ஆங்கிலமும் தெரிந்தால்தான் வேலைவாய்ப்பு என்றால், தாய்மொழியைக் கற்பதற்கு யார் விரும்புவார்?

இனி, இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இருமொழிகள் படித்தாலே போதும், அல்லது இந்தி படித்தாலே போதும் என்கிற நிலையிலிருந்தால், மற்றவர்கள் எப்படிச் சம வாய்ப்பு பெறமுடியும்? ஆங்கிலம் படித்தவர்களே இந்தி படித்தவர்களுடன் போட்டி போட முடியாது, சமவாய்ப்புப் பெறமுடியாது என்ற நிலை இருக்கும் பொழுது, இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தவிர, பிற மாநிலத்தவர்கள் எதற்காக வேறு இரண்டு மொழிகளையும் கற்கவேண்டும்? இஃது எப்படிச் சரியானதாகும்? மற்ற மாநிலத்தவர்கள் தங்கள் தாய்மொழியையும் உலக மொழியாகிய ஆங்கிலத்தையும் கற்றாலே, இந்தி கற்றவர்க்கு இருக்கும் வாய்ப்பு அவருக்கு இல்லை என்றால், மற்றவர்கள் எத்தனை மொழிகளைக் கற்றாலும் பயனில்லை என்பதுதானே பொருள்? அப்படியானால் மற்றவர்களை இந்தி படிக்க வைப்பதுதானே இத்திட்டத்தின் நோக்கம். அதைச் சுற்றி வளைத்துச் சொல்வதுதானே இந்த மும்மொழித் திட்டம்! இப்படிக் கரவான, ஒரவஞ்சனையான திட்டத்தைத்தானே நடுவணரசு செயலுக்குக் கொண்டுவரத் துடிக்கிறது. ஆனால் தமிழக அரசு இத்திட்டத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பது மட்டும் அன்று; இதற்கு எதிரிடையான ஒரு திட்டத்தையும் அறிவிக்க வேண்டும்.

அஃதாவது, தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு கல்வி கற்றவர்க்குத்தான் தமிழ் நாட்டு அரசுப் பணிகளில் முதல் வாய்ப்பு என்றும், ஆங்கிலவழிக் கல்வி கற்றாலும் தமிழை இரண்டாம் மொழியாகப் படித்தவர்க்குத்தான் அடுத்த வாய்ப்பு என்றும், தமிழ்க் கல்வி கற்காத எவருமே, இந்தப் பணிவாய்ப்புப்பெற இயலாதென்றும் வெளிப்படையாகத் திட்டவட்டமாக அறிவிப்புச் செய்து விட வேண்டும். இதைவிட்டு, வெறுமனே எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று வாய்முழக்கம் போட்டுக் கொண்டிருப்பதில் எள்ளளவும் பயனில்லை. தமிழ்நாட்டில், தமிழில் படித்தவர்களுக்கு வாய்ப்பில்லையென்றால், வேறு எந்த நாட்டில் அந்த வாய்ப்பைப் பெறமுடியும்? அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். இனியும் தொடை நடுங்கித்தனம் வேண்டாம்.

தனித்தமிழ் எழுத்தாளர்களுக்கு ஒரு நல்லறிவிப்பு!

தனித்தமிழ் எழுத்தாளர்/பேச்சாளர்/பிறதுறையினர் யார்? எவர்? எனும் நூல் உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அறிஞர் பெருமக்கள் தங்களைப் பற்றிய முழு விளக்கங்களையும் விரிவாக எழுதிக் கீழ்க்காணும் முகவரிக்கு விடுக்கவும்.

1. தங்களின் வாழ்க்கை-அலுவல் குறிப்பு 2. வெளியிட்ட நூல்கள்/இதழ்கள் 3. ஈடுபாடு கொண்ட துறைகள் 4. ஆற்றியுள்ள தொண்டுகள் 5. எதிர்காலத் திட்டம் ஆகிய செய்திகளையும் தவறாமல் எழுதவும்.

இவண்
க. தமிழமல்லன், தலைவர் தனித்தமிழ்க் கழகம், 168, மாரியம்மன் கோயில்தெரு, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி-605009.

'தமிழ்நிலம்' வெளியீடு பற்றி மனந்திறந்த ஓர் அறிவிப்பு

தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களால் தொடர்ந்து பெருத்த இழப்பே ஏற்பட்டு வந்திருந்தாலும், நாம் எடுத்துக் கொண்ட கொள்கையை எப்படியாகிலும் சொல்லிக் கொண்டாவது இருக்க வேண்டுமே என்ற எண்ணத்தில், விடாமுயற்சியுடன் அவற்றை, என் சொற்பொழிவு வருவாயைக் கொண்டும், நூல்கள் விற்பனையைக் கொண்டும், அன்பர் சிலரின் நன்கொடைகளை வைத்தும், தொடர்ந்து நடத்தி வந்தேன்.

இந்நிலையில் உ.த.மு.க.வைத் தொடங்கவே ஓரளவு தயங்கிக் கொண்டிருந்தேன். ஆனால் எப்படியும் செய்தாக வேண்டுமே என்ற நிலையில் இயக்கத்தையும் தொடங்க வேண்டியதாயிற்று. அதன்பின் 'தமிழ்நிலம்' இதழும் தேவையானதாகப் போயிற்று. அதையும் தொடங்கினேன். இன்று சுமை இரண்டு படியாக, மூன்று படியாக, நான்கு படியாக வளர்ந்துவிட்டது. ஓய்வில்லை. ஒழிவில்லை. இச் சுமைகளை அறிந்த அன்பர்கள் சிலரும் இரக்கப்படுகின்றார்களே தவிர, உழைப்புக்கும் உதவிக்கும் வர அஞ்சுகிறார்கள்; தயங்குகிறார்கள்; வர விரும்புவர்களையும் தடை செய்கிறார்கள். பெரும்பாலும் அவர்களுக்கிருக்கும் நல்ல வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ள யாரும் விரும்பவில்லை. நல்ல வருவாய் உள்ள முயற்சியாக இருந்தால் அனைவரும் வருவர். உழைப்பு மிகுந்து, வருவாய் மிகவும் குறைவாக இருப்பின் எவர்தாம் முன்வருவார்? இனி, அதைப்பற்றியெல்லாம் விரிவாக எடுத்துக் கூற நானும் விரும்பவில்லை; அதற்கு இது நேரமும் இல்லை.

வினைச்சுமை எப்படியோ போகட்டும். பொருள்சுமை அளவுக்கு மீறிவிட்டது. 'தமிழ்நிலம்' வெளிவந்த நான்கு மாதங்களுக்குள் உருபா பன்னீராயிரத்துக்கு மேல் இழப்பு ஆகியிருக்கிறது. ஒருமாதம் (4 இதழ்கள்) வெளிவர ஆறாயிரம் உருபா ஆகிறது. வரவு நான்கில் ஒருபங்கு கூடவருவதில்லை விளம்பர வருமானமோ அறவே இல்லை. வாங்கி விற்கும் அன்பர்களில் ஒருசிலர் தவிர, மற்றவர்கள் பணமே இதுவரை அனுப்பவில்லை. 'நாள்காட்டி' வேறு சுமையைக் கூட்டிவிட்டது. இன்றைய நிலையில் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்' நாள்காட்டி ஆகியவற்றில் வரவேண்டிய நிலுவை மட்டும் உருபா பதினையாயிரம் இருக்கும். இழப்புக் கணக்கு தனி.

எப்படியோ, உடலும் உயிரும் தேயத் தேய் உழைத்து வருகின்றேன். நமக்கு உதவுகின்ற முத்தையாக்களோ, மகாலிங்கங்களோ எவரும் இல்லை. உதவியாக வந்த ஓரிருவரும் தந்த பணத்தைக் கடனாக மாற்றித் திருப்பிக் கேட்கின்ற நிலைதான் உள்ளது.

இந்த நிலைகளில், 'தமிழ்நிலம்', 'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு" ஆகியவை கணங்கிக் கணங்கித்தான் வரமுடியும். அச்சக இயக்கநிலைகள் வேறு. மின்தடை வேறு. அச்சகம் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம், இயக்கம், என் தனி அறிவாக்கப்பணி-இவை அனைத்துக்கும் நானும் என் இரண்டாவது மகன் பொழிலுந்தாம்! இடையிடையில் ஓரிரு நல்ல உள்ளங்கள் உதவிக்கு வருகின்றன. அலுவலகத்தில் ஒரே எழுத்தர். கோப்பாளர் ஒருவர். பொறியாளர் ஒருவர். வரப்பின் மேல் இருந்து கொண்டு எப்படியும் பேசலாம்; திறனாய்வு செய்யலாம்; அறிவுரை கூறலாம். வயலில் இறங்கி வேலை செய்பவர்க்குத்தான் உழைப்பின் சுமை தெரியும்; காலிலும் கையிலும் உடம்பிலும் சேறுபடும். இந்தச் சேற்றைக் கறையாக எண்ணிச் சலித்துக் கொள்பவர்களும் இல்லாமல் இல்லை; முகஞ்சுளிப்பவர்களும் உண்டு. குற்றம் என்று கூறிக் கொள்கை முறிப்பவர்களும் உண்டு.

ஆனாலும், ஏற்ற கொள்கைக்கு இறுதி மூச்சு வரை உழைத்துத் தீருவது என்று என்றோ கொண்ட உறுதி என்றுமே தளராது. ஆனால், தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகியவற்றை வாங்கி விற்கின்ற தொண்டைச் செய்யும் அன்பர்கள் (வாணிகர்கள் அல்லர்) தங்களிடம் உள்ள நிலுவைத் தொகையை உடனுக்குடனே அனுப்பி வைத்தாலாவது பெருத்த துணையாக இருக்கும். அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இதழ்கள் தொடர்ந்து வரவேண்டுமானால் நாங்கள் உழைத்தால்மட்டும் போதாது. 'நீங்களும் துணைநிற்கவேண்டும். துணையாக இராமற்போனாலும் தடையாக இருக்காதீர்கள்.

அன்புடன்
பெருஞ்சித்திரன்.
சென்னை-5
31-3-83.

காரல் மார்க்சு- எனுங் கதிரவன்



பாரினில் பாட்டாளப் பகுதியர் யாவரும்
காரிருள் மூடிக் கண்கலங் குகையில்
காரல் மார்க்சு-எனும் கதிரவன் தோன்றி
ஒரியல்பு எனும்பொது ஒளியைப் பாய்ச்சினான்!

துவண்டு கிடந்த தொழிலாளர் உலகம்
உவந்து நிமிர்ந்ததவ் வொளிவெள் ளத்தினால்!

கூனிக் கிடந்தவர் முதுகுநே ரானது!
குறுகிக் கிடந்தவர் கைகள் உயர்ந்தன!

உழைப்பவர் உலகம் ஒன்று சேர்ந்திட
அழைப்பு விடுத்தான் அறிஞர் தலைவன்!

அழைத்த குரல்கேட் டனைவரும் வியந்தனர்!
உழைத்த கைகள் ஒன்று சேர்ந்தன!
வெம்பிய உளங்கள் விழித்துக் கொண்டன!
கும்பி காய்ந்தவர் கொதிப்புற் றெழுந்தனர்!
உழைப்பவர்க் குலகம் உடைமை என்றான்!
தழைக்கும் முதலாளியர் தருக்கை உடைத்தான்!

எங்கல் செனும்உயிர் நண்பனோ டிணைந்து
பொங்கும் அறிவியற் பொதுவுடை மைக்கோ
வடிவம் தந்திவ் வுலகுக்கு வழங்கினான்!
மடிவுற லானது முதலாளி மாண்பு!
விடிவு பிறந்தது வெயர்வை உடற்கெலாம்!
கொடியவர் ஆட்சியைக் குழியில் புதைத்தனர்!

உழவும் உழைப்பும் உடைமைக்கு உரிய—என
முழவு கொட்டிய மூதறி வாளனின்—
பொதுஅறம் பாடிய புதுமைச் சிற்பியின்—
பொதுமைக் கொள்கை யாங்கணும் பொலிகவே!

தென்மொழி தமிழ்ச்சிட்டு

தவறாமல் படியுங்கள்!

அவை உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் பயனுடையன !

★ பார்ப்பனர் திருந்திவிட்டால், அவர்களைத் திட்ட, வெறுக்கத் தேவையில்லை!

★ ஆனால் திருந்துவார்களா என்பது ஐயமே !

திருந்திவரும் பார்ப்பனர்களை வரவேற்கிறோம்; வாழ்த்துகிறோம்!

போர்ட்பிளேயர் அறிவின்பன் மடலுக்கு அன்பர்களின் மறுப்புரையும் விளக்கவுரையும்!

மடல் 1 எழுதியவர் : சோமனார் பசுத்மராயன் . க . மு . க இ .

'ஐயா, பார்ப்பனரை ஒட்டு மொத்தமாக இனங் கட்டித் திட்டுவது சரிதானா? எண்ணிப் பார்க்கவேண்டு கிறேன்'—என்று கேட்டு, வேண்டியுள்ள அந்தமான் திரு. அறிவன்டன் அவர்களுக்கு அவர் கேட்டுள்ளதை யொட்டிச் சில தகவல்களை அளிக்கக் கடமைப்பட்டுள் ளேன். (தமிழ்நிலம்-இதழ் 13)

இந்தக் கேள்வி சரியா, தவறா என்பது ஒருபுற மிருக்க, பார்ப்பனர்களை, இனத் தன்மையை—அஃதா வது அவர்கள் தமிழ இனத்தின் ஒரு குழுகப்பிரிவி னர், தமிழ்நாட்டிற்கு வெளியே தமிழராகவே வாழ்ந்து வருகின்றார்—என்பதை ஒப்புவமை காட்டி, திரு. அறி வின்பன் விளக்க முற்பட்டிருப்பதில் உள்ள முரண்பாடு களை எடுத்துக் கூறியாக வேண்டும்.

பிற திரவிடத் தாய்மொழியினரின் நடைமுறை:

தமிழ்நாட்டைச் சொந்த நிலமாகக் கொண்டு வாழும் எத்தனையோ ஆயிரக்கணக்கான நாயுடுமார் களும், இரெட்டிமார்களும், நாயக்கர்மார்களும், வடுகர் மார்களும் இன்னும் எத்தனையோ இனத்தார்களும் தமிழ்நாட்டிலே தமிழர்களாகவே இருந்தாலும், தமிழ் நாட்டை விட்டுக் கடப்பார்களேயானால், அவர்கள் தமிழர்களாக வாழ்வதில்லை. வீட்டிலிருந்து கூடத் தமிழ் விரட்டப்பட்டு அவர்களது மொழியில் உறவாடி அந்தந்த மொழிக் குடும்பங்களோடு ஒட்டி உறவாடித் தமிழரிலிருந்து மாறுபட்ட நிலையிலேயே வாழ்கின்ற னர்' என அந்தமான் திரு. அறிவின்பன் தமிழ்நாட் டில் உள்ள பிற மொழிச் சிறுபான்மையினரைக் குறை கண்டு கூறியுள்ளார்.

இம் மொழிச் சிறுபான்மையினர் தங்கள் இன மக்கள் வாழும் பிற பகுதிகளுக்குச் சென்றால் தங்கள் தாய்மொழியில் உரையாடுவது இயல்பானது. தவிர்க்க இயலாதது. தவறேதுமில்லையே! இவர்கள் தமிழ் இனம், மொழி பற்றி எந்த நிலையும் கொள்கையும் (Stand and Policy) கொண்டுள்ளார்களா என்பது தான் முகாமை. இன்றுவரை தமிழ்நாட்டின் பொது வாழ்க்கையில் அரசியல், சமயம், கல்வித் துறைகளில் தமிழ் இனத்தின், மொழியின் நலன்களுக்கு மாறு பாடான, தாங்கள் வேற்று மொழியினர், இனத்தினர் என்ற அடிப்படையிலான, எந்த கொள்கையையும் நிலையையும் இரெட்டிமாரோ, நாயுடுமாரோ, நாய்க்க மாரோ, வடுகமாரோ கொள்ளவில்லை. தனிப்பட்ட சொந்தச் சூழல்களில் தவிர இவர்கள் தங்களின் தாய் மொழியின உரிமை எதையும் கேட்கக்கூடச் செய்வ தில்லை. தமிழில்தான் கற்கிறார்கள். தமிழைத்தான் முதல் மொழியாகப் பல்கலைக் கழகக் கல்வி பயிலும் போதும் ஏற்றுள்ளார்கள். கோவையில் உள்ள 'நாயுடு' ஆலை அதிபர்கள் நடத்தும் பள்ளிகள் (1970 இலும் இந்த 1980 இலும்) தொடங்கப் பட்டுள்ள ஆங்கிலக் குழந்தைகள் மற்றும் உயர் பள்ளிகள் தவிர) அனைத்தும் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டவையே! தெலுங்கை மொழி யாக வேனும் கற்க முயலவில்லை. இன்றும் ஆங்கிலப் பள்ளிகளுக்கு அனுப்பப்படும் இவர்கள் (தெலுங்குத் தொழிலதிபர்கள்) வீட்டுக் குழந்தைகள் இரண்டாம் மொழியாகத் தமிழைத்தான் ஏற்கின்றனர் (முதல் மொழி ஆங்கிலம்). இராமநாதபுரம் மாவட்ட 'ராசா' (Rajas) தெலுங்கு குழுகப்பிரிவைச்சேர்ந்த தொழிலதி பர்கள் தொடங்கிய பள்ளி, உயர்பள்ளிகளிலும் இதே நிலை. செங்கை, வட, தென் ஆற்காடு, திருச்சி மா வட்டங்களிலும் இரெட்டிமார்கள் இதே நிலையில்தான் உள்ளார்கள். சுருக்கமாகத் தமிழ் இன, மொழி நலன்களுக்கெதிராக இன்றைய சூழலில் இவர்கள் யாரும் எதுவும் இன்றுவரை கூறவில்லை.

பார்ப்பனரின் நடைமுறை எப்படியுள்ளது?

ஆனால்—தமிழ இனத்தின் ஒரு குழுகப் பிரிவா கவே ஏற்றுக் கொண்டாலும், பார்ப்பன இனத்தினர் தமிழ்நாட்டிலும் வெளியிலும் தமிழையே தாய்மொழி யாகக் கொண்டாலும், இவர்களுக்கு இன நலன், மொழி நலன் பேணும் கருத்து வலிமையும் கடமையும் (Conviction and Commitment) இருப்பதாகக் கொள்ளுவது மிகவும் கடினம். இவர்களின் வட மொழிப் பற்று உலகறிந்ததே! அந்தமான் அறிவின் பன் கேட்கிறார். 'நம்மவர்களில் சமற்கிருதத்தைத் தலைமேல் கொண்டு ஆடிய முதலியார்கள் இல்லையா? செட்டியார்கள் இல்லையா? பிள்ளைமார்கள் இல்லையா?'

உண்டு. ஆனால் தமிழ் இனத்தின் கவுண்டர் முதலியார், செட்டியார், பிள்ளைமார், இன்னும் பல பிரிவினர் சமற்கிருதத்தைத் தலைமேல் கொண்டு ஆடு வதற்குக் காரணியமும் தூண்டுதலும் யார்? பார்ப்பன இனத்தினர் தாமே! சரி, இன்றைய நிலை என்ன? கும்பகோணம் காசிராமன் என்ற பார்ப்பனர் தலைமை யில் அமைந்துள்ள தமிழ்நாடு பார்ப்பன சங்கம் 'கோவில்களில் தமிழ்மொழியைப் பயன்படுத்த வேண் டும் என்று கேட்பதும் நாத்திகமே' எனச்சாடியுள்ளது. 'இந்து' நாளிதழிலே தமிழைப் பயன்படுத்துவதால் கோயில் 'புனிதத்தை' இழக்கும்; புனிதப்படுத்தும் சடங்குகள் (Purificatory Ceremonies) செய்ய வேண் டும் என்று எழுதுகிறார்கள். தமிழைப் பயன்படுத்தும் அரசின் ஆணைக்கெதிராக உயர்மிசை அறமன்றம் (Supreme Court) வரை சென்று தடைபெறுவதும் பார்ப்பனக் குழுகப் பிரிவினர்தாம். அனைத்துச் சாதியினரும் அருச்சகர்கள் ஆகலாம் என்ற கொள்கை யை எதிர்ப்பதும் இவர்களே; அல்லது இவர்களால் தூண்டிவிடப்படுபவர்களே. இன்று தமிழ்நாடெங்கும் உள்ள பார்ப்பனக் கழகக் கிளைகள் சமற்கிருத வகுப்பு களைத் தனியே தம்மினக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்து வருகின்றன. எந்தப் பார்ப்பனரற்ற பிற தமிழக் குழுகப் பிரிவினரும் இவ்வளவு வடமொழிப் பற்றுடையோராக விளங்குவதில்லை.

'பார்ப்பனக் குழுகத்தினர் தமிழ்நாட்டுக்கு வெளி யேயும் தமிழர்களாகவே வாழ்ந்து வருவதாக' திரு. அறிவின்பன் கூறுகிறார். வளர்ந்த தலைமுறையினர் இப்படித் தமிழ் பேசியும், தமிழ் மன்றங்களைத் தங்க ளின் வாழ்விடங்களில் எல்லாம் அமைத்தும் பார்ப்ப னர் குழுகமும் தமிழர்களாக வாழ்ந்து வந்திருக்கலாம். ஆனால் தங்கள் வளரும் தலைமுறையினரைப் பார்ப் பனக் குழந்தைகளை இவர்கள் தமிழர்களாக வளர்ப்ப தில்லை. சான்றாக நான் இதைக் கூறுகிறேன். 'அது மட்டுமன்று, தில்லித் தமிழர்களின் குழந்தைகள் தங்களுக்குள் இந்தியில்தான் பேசிக் கொள்கிறார்கள்'. —(ஆனந்தவிகடன், கிழமை ஏடு, 6-3-83. பக்கம் 96) தில்லியில் பெரும்பான்மைத் தமிழர் பார்ப்பனர்தாம்.

பார்ப்பனர்கள் தமிழை, தமிழினத்தை விரும்புகின்றனரா?

ஆம். தமிழ்ப்பள்ளிகளை அமைத்ததும், சங்கங்களை வைத்ததும்; இப்படித் தமிழரென்று கூறியதும் இவர் களின் வளர்ந்த, கடந்த தலைமுறையினர். இனி அவர் கள் தங்களைத் தமிழரென்று கூறிக் கொள்ளப் போவ தில்லை. அதுமட்டுமன்று பிற தமிழ்க் குழுகப் பிரிவின ரையும் இனப்பற்று, மொழிப்பற்றிலிருந்து திசை திருப்பவே தங்களின் கைகளில் உள்ள வலிவு வாய்ந்த ஏடுகளைப் பயன்படுத்தி வருகின்றனர். 'ஆனந்தவிக டன்' கிழமை ஏடு ஆறு கிழமைகள் 'தேசியம் வளர வழி என்ன' என்ற வினாத் தலைப்பில் தொடர் ஆசிரிய வுரை (Continuing and series of editorials) ஆனந்த விகடன், 29-8-82 முதல் 3-10-82 பக்கலிட்ட ஆறு கிழமை இதழ்கள்) எழுதி **இந்தி படிப்பதுதான் வழி'** என எழுதியுள்ளது. 'துக்ளக்', தினமணி, இந்து, இந்தியன் எக்சுபிரசு, கல்கி இன்னும் அனைத்துப் பார்ப்பன இனப் பிரிவு சார்ந்தவர்களால் நடத்தப்படும் ஏடுகளும் இன்று தமிழர்களை 'இந்தி'யர்களாக்க முழு மூச்சாக இறங்கிவிட்டன.

இந்தியை அவர்கள் விரும்புவது ஏன்?

இந்தக் கருத்துப்பரப்பலுக்கு எதிராக நாம் எவ் வளவு எழுதினாலும் வெளியிடுவதில்லை. இப்படித் தமிழையே தாயமொழியாகக் கொண்டிருந்தாலும் தமிழ்நாட்டிற்கு வெளியேகூட தமிழ்ச் சங்கங்கள் அமைத்திருந்தாலும், தமிழராகவே இன்றுவரை வாழ்ந்து காட்டிக் கொண்டிருந்தாலும், இன்றைய இடர்மிக்க நாட்களிலும்; தமிழனுக்கும் தமிழுக்கும் எதிர்காலமில்லை, வாழ்வில்லை, வளர்ச்சியில்லை என்று தெளிவாகவே எடுத்துக் காட்டும் அறிகுறிகள் தோன் றியபின்னும், இந்திய ஒன்றியத்தில் தில்லிக்கு முற்றி லும் கட்டுப்பட்ட மாநிலமாகத் தமிழ்நாடு இருப்பது, எதிர்கால இன, மொழி நலன்களுக்கு ஏற்றதன்று என்று, மிகமிகத் தெளிவாகத் தெரிந்தாலும், இப் போதுதான் இந்தியத் தேசியம் மற்றும் இந்தி ஆதர வுக் கருத்துப்பரப்பல்களை மிகமிக முனைப்பாகவே பார்ப்பன இனத்தினர் செய்து வருகிறார்கள்.

வாஞ்சிநாதர், ஆனந்தீசுவரர், கீதா-இவர்கள் நெறிவிலக்கினர்:

அந்தமானின் திரு. வாஞ்சி அய்யரும், இங்கு தமிழ்நாட்டில் இருந்து மறைந்துவிட்ட பரிதிமாற் கலைஞரும், இன்னும் இவர்கள் போன்ற பிறர் சிலரும் பார்ப்பன இனத்தில் நெறி விலக்குகள். இன்றும் இங்கே இந்தி வல்லாண்மையை எதிர்த்து 'இந்து' ஏட்டில் கடுமையான, தேள் கொட்டுவது போன்ற நடையில் (Strong and Stinging Style) எழுதிவரும் உதகை திரு. ஆனந்தீசுவரன், மற்றும், 'தமிழ் நாட்டில் இந்தியைக் கற்றுக் கொடுக்க வேண்டிய தேவை யில்லை; அது படித்து வாழ்வு தேடிக் கொள்ளவிரும்பு கிறவர்கள் வடக்கேயே ஓடிவிடுங்கள்' என்று எழுதி வரும் சென்னை திருவாட்டி. கீதா உதயகுமார் போன்ற வர்களும் நெறி விலக்கே. (இருவரும் பார்ப்பனத் தமிழ் இனப் பிரிவினர்.)

திரு. ஆனந்தீசுவரன் வடவரின் ஆளுமையை முற்றிலும் வெறுப்பவர். இவருக்குக் கோவையில் பேராசிரியர் திருமிகு. ஆசான் அவர்களின் கல்வி அகத்தில் இரு திங்களுக்கு முன்பு ஒரு பாராட்டு விழா நடத்தினோம். இந்தித் திணிப்பை நடுவண் அரசு தொடர்ந்தால் இலங்கையில் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் தோன்றியுள்ளது போல் இந்தியாவில் தமிழ்நாட்டு விடுதலைப் போராட்டம் தோன்றும் என முழங்கியவர்; உலகில் பல நாடுகளில் வாழ்ந்து பணி யாற்றியவர். இலங்கையில் ஏழாண்டுப் பணி செய்த தால் அங்குள்ள ஈழத் தமிழரின் விடுதலை உணர்வின் ஆழத்தையும் வேகத்தையும் பெரிதும் அறிந்தவர்.

சென்னை திருவாட்டி. கீதா அவர்களும் தனித் தமிழ்ப் பற்று மிக்கவர். கோயில்களில் தமிழ்தான் வேண்டும் என்ற கொள்கையை உடையவர். வட மொழி வல்லாண்மையால் தமிழ் மொழி சிதைவுற் றதை உள்ளத்தால் உண்மையாகவே வெறுப்பவர். சாதியையும், பிராமணச் சடங்குகள் பழக்கவழக்கங் களையும் வெறுப்பவர். சாதியை விட்டே வெளியே றிப் பிராமணரல்லாதாரை மணம் கொண்டவர். இவரளவு பொருளியல் நிலையும், சாதிப் பின்னணியும் குடும்பச் சூழ்நிலைகளையும் கொண்ட எந்தப் பார்ப் பனத் தமிழ் பெண்ணும் இவரது மொழிப்பற்றில் ஒருவிழுக்காடு கூட பெற்றிருக்கமாட்டார்கள்.

திருவாட்டி கீதாவின், 'இந்து' செய்தியேட்டில் வெளியான மடலொன்றின் தமிழாக்கம் 'தமிழ்நிலத் தில்' வெளியானது.

இருப்பினும், அந்தமானில் இருந்த திரு. வாஞ்சி நாத ஐயர், தமிழ்நாட்டு திரு. ஆனந்தீசுவரன், திரு வாட்டி கீதா ஆகியோர் நெறி விலக்குகள் தாம். ஒட்டு மொத்தமாக ஒரு குழுகத்தினர் என்ற அளவில், பார்ப்பன குழுகத்தினர் தமிழ் இனத்தின், மொழி யின் நலன்களை பாதுகாக்கக்கூடியவர்கள் என்று எண்ண அடிப்படை எதுவும் இல்லை.

தமிழினம் விழித்துக் கொள்வதை அவர்கள் விரும்பவில்லை:

இக்குழுகத்தினரான பலரும், முகாமையாகச் செய்தியேட்டுத்துறை, எழுத்துத்துறை ஆகியவற்றில் உள்ளவர்கள். எங்கே தமிழினம் விழித்துக் கொள்ளு மோ, உரிமையையும் விடுதலையையும் வேண்டி உரக் கக் குரல் கொடுத்துவிடுமோ என மிகமிக எச்சரிக்கை யாகவே உள்ளனர். அதற்காக, இந்துமதம், வட மொழி, இந்தியத் தேசியம், இந்தி ஆகியவற்றைத் தீவிரமாகக் கருத்துப்பரப்பால் செய்துவருகின்றனர். என்றோ தூங்கிவிட்ட தமிழரைத் தொடர்ந்து தூக்க நிலையில் வைத்துவரப் பெரிதும் முயற்சி செய்கிறார் கள். இனப் பற்றும் மொழிப் பற்றும் உள்ளவர்கள் செய்யும் செயலா இது?

இக் குழுகத்தினரை 'மொத்தமாகத் திட்டுவது சரியெனப் படவில்லை' என்று திரு. அறிவின்பன் கூறு வது வேறெந்தச் சூழ்நிலையிலும் நயமானதும், சரி

(தொடர்ச்சி 5-ஆம் பக்கம்)

தெரியுமா செய்தி?

1. பனி(இமய) மலையில் பனி மாந்தர் வாழ்கின்றனர். இவர்களின் உடலில் செம்பழுப்பு நிறமான நீண்ட மயிர் உள்ளது. ஆண்கள் 12 அடிவரையிலும், பெண் கள் 8 அடிவரையிலும் உயரமுடையவர்கள். நாட்டு மாந்தரான நாகரிக மாந்தரிடம் இனக் கலவையுடை யவர்கள்.
2. ஏவாங்கென்னும் சீன மொழித் தட்டச்சுப்பொறி யில் 582 எழுத்துகள் உள்ளன.
3. சூரியஒளி நம் நிலவுலகை வந்தடைய ஏறத்தாழ 8 நிமையங்களாகின்றன. நிலவின் ஒளி இங்குவர ஒரு நிமைய நேரமே ஆகின்றது.
4. ஆமை ஒரு மணி நேரத்தில் 0.41 அ.மா. (கி.மீ) தொலைவு செல்லும்.

— கி. இளஞ்சேரல் முதுபாண்டியன்.

★ மலையாளப் பகுதியில் தமிழர்கள் வாழ முடியவில்லையே!

★ தமிழ்நாட்டில் அவர்கள் எவ்வகை அச்சமின்றியும் வாழ்வதை நினைக்கவேண்டும்!

என் அளியர் ஒருவர் வெள்ளிருப்பு — அளமியக் (அலுமினியச்) கலன்களை மிதி வண்டியில் கொண்டு சென்று கூவி விற்பவர். கேரள மாநிலம் 'பத்தனம் திட்டா' என்னும் ஊரில் ஆறு ஆண்டுகளாக வாணிகம் செய்து வருகிறார். விரைவில் ஊருக்கு வரப் போகிறார் என்றார்கள். என்ன காரணியம் என்று கேட்டேன். ஏனென்றால் அவர் ஊர் வந்து போய்ச் சில நாட்களே ஆகின்றன. ''உங்கள் ஊருக்குப் போய் விடுங்கள்'' என்று அடித்து விரட்டுகின்றார்களாம், மலையாளியர்! ஏறத்தாழ உரு. 3000 வரை ஊர்களில் கடன் கொடுத்திருக்கிறார். அதை இழந்து விட்டு வரப் போகிறார். அவர் மட்டுமா? இல்லை. புளியங்குடியில் இருந்து சென்ற ஏறத்தாழ நூறு வாணிகர்களும் தத்தம் கடன்களை விட்டு விட்டு வந்து கொண்டு இருக்கின்றனர்.

என்ன நடந்தது? ஏன் இவ்வாறு விரட்டுகின்றார்கள்? என்று கேட்டேன். கிடைத்த விடை இது. திரு. வெள்ளைச்சாமி என்பவர் வெள்ளிருப்புக் கலன்களைப் பத்தனம் திட்டையில் கடைபோட்டு விற்பவர். ஒரு நாள் சரக்குந்தில் கலன்கள் வந்தன இரண்டு மூட்டைகளைக் கடைக்காரருடன் இருக்கும் வேலையாட்கள் இறக்கியிருக்கின்றனர். அப்போது வழக்கமாகச் சுமை இறக்கும் மலையாளக் கூலியர் வந்தனராம். 'எப்படி நாங்கள் இல்லாமல் நீங்கள் இறக்கினீர்கள்?'' என்று வன்பு செய்தனராம். ''நீங்கள் இல்லை; அதனால் இறக்கி விட்டோம். இன்னொரு மூட்டை இருக்கிறது. அதை நீங்கள் இறக்குங்கள்'' என்று கடைக்காரர் சொல்லியிருக்கிறார் தருக்கம் செய்து கொண்டே அந்த மூட்டையை இறசுகிவிட்டு, அவர்கள் இறக்காத மூட்டைகளுக்கும் சேர்த்துக்கூலி கேட்டுத் தொல்லை தந்தனராம். பேச்சு முற்றிக் கைகலப்பு வந்ததாப. ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனராம் இதற்கு முன்பெல்லாம் தமிழர் அடிபட்டால் திருப்பித் தாக்குவது இல்லையாம். அவர்கள் வாடகைக்குக் குடியிருக்கும் வீட்டுக்காரரிடம் சொல்லுவார்களாம். அவர் அடித்தவர்களைக் கண்டித்துவிட்டு நேர் செய்து வைப்பாராம். இந்த முறை அடிபட்டுக் கொண்டு சும்மா இருக்காமல் திருப்பித் தாக்கி விட்டார்கள். அவ்வளவு தான்!

''பிழைப்புக்கு வந்தவர்கள் இந்த மண்ணில் பிறந்தவர்களை அடித்து விட்டார்களே' என்று கறுவுகின்றார்களாம், அந்த ஊரைச் சேர்ந்தவர்கள். எனவேதான் இந்த நடவடிக்கை. பலர் ஊருக்கு வந்து விட்டனர். எஞ்சியோர் வரவுள்ளனர். நெடுநாள் இருந்த ஒரு கடைக்காரருக்கு மட்டும் கடை நடத்தத் தடை இல்லையாம். அவர் தாம் ஓடி வந்தவரின் கடைப் பொருள்களைக் காத்து வைத்துள்ளாராம். எங்காகிலும் தமிழருக்கும், மலையாளியருக்கும் சூடான பேச்சோ சண்டையோ தொடங்குமானால் எல்லா மலையாளியரும் மொலோரென்று வந்து சூழ்ந்து கொள்வார்களாம். ஆனால் தமிழ்நாட்டிலோ நிலை வேறு! மாங்குடி (முகவை மா.வ.) என்னும் ஊரில் மலையாள (ஓமியோ) மருத்துவர் வந்து ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகளாகத் தங்கியிருக்கிறார். இங்கு வந்த பின்பு மருத்துவ வருமானத்தால் நிலபுலன்கள் வாங்கியுள்ளார். தேர்தல் காலங்களில் மிகத் தீவிரமாகத் திரு. இராமச்சந்திரனுக்குச் சார்பாக வேலை செய்தாராம். யாராகிலும் திரு. எம். சி. இராவைக் குறை கூறினால் அதற்கு மிடுக்காக விடை சொல்வதுடன் கலைஞரை இழித்தும் பேசுவாராம். அந்த அளவுக்கு உரிமை தந்துள்ளனர் தமிழர்! ஆனால் மூணாறில் இருந்து தமிழர்களை விரட்டச் சூழ்ச்சி செய்கின்றனர், மலையாளியர். கம்பம் பகுதியில் நிலப்பறிப்பு செய்கின்றனர், மலையாளியர். திரவிடச் சேரரின் இச்செயல்கள் கண்டாகிலும் திருந்துவோம். 'தமிழன்' என்னும் இன உணர்வு கொள்வோம்!

'திருச்செந்தூர் தேர்தல், திராவிடமா, தேசியமா என்பதை மெய்ப்பிக்கப் போகிறது'- என்று பேசினார் மரகதம் சந்திரசேகர்!

'திராவிடம்' என்பது மெய்யாகி விட்டதை அம்மையார் ஒப்புக்கொள்வாரா?

தமிழ்நாடு இந்திரா பேராயக் கட்சித் தலைவராக இருக்கும் பா். திருவாட்டி மரகதம் சந்திரசேகர் அம்மையார், திருச்செந்தூர் இடைத்தேர்தலின்போது இந்தத் தேர்தல் தமிழ்நாட்டில் திரவிடமா? தேசியமா? என்பதை மெய்ப்பிக்கப் போகின்றது' என்று ஒரு கூட்டத்தில் பேசினார்கள்.

அந்தோ! இந்தேர்தலில் தேசியக் கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட அத்தனை வேட்பாளர்களும் தத்தம் பொறுப்புத் தொகைகளைப் பறிகொடுத்து விட்டனர். அம்மையாருக்கு இப்போதாகிலும் 'தமிழ்நாட்டில் திரவிடமே' என்பது தெளிவாகியிருக்கும். எனவே அவர் பேராயக் கட்சியில் இருந்து விலகித் திரவிடக் கட்சியொன்றில் சேர்ந்துவிடல் (தலைமையேற்கப் போவது) நல்லது.

- த. அன்பழகன்

★ அசாம் தேர்தல் - ஒரு கண்ணோட்டம்!

நடந்து முடிந்த அசாம் மாநிலப் பொதுத் தேர்தலில் இந்திராப் பேராயக் கட்சி பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றி(வென்றன்று) ஆட்சியில் அமர்ந்துள்ளது. இதற்கு முன்னதாக மக்களும், மாணவர்களும் ஒருங்கிணைந்து நடத்தி வருகின்ற போராட்டங்களும், உயிர் உடைமை இழப்புகளும் அனைவரும் அறிந்தனவே. இப்போராட்டத்தினை அடக்கிடும் நோக்கோடு நடுவணரசு மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள் மாந்தநேயத்துக்குச் சற்றும் பொருத்தமில்லாத செய்கைகளாகும்.

முதன்மையான எதிர்க் கட்சிகளான சனதா, பாரதீய சனதா மற்றும பல கட்சிகள் இத்தேர்தலைப் புறக்கணித்திருந்த போதிலும் பொதுவுடைமையை உயிர் மூச்செனக் கூறிவரும இதே பொதுவுடைமைக் கட்சிகளான CPI, CPI (M) கட்சிகளும், திருத்தப்பட்ட சமநிலைக் கொள்கை கூறிவரும் (Suci) என்னும் மூன்று வது கட்சியும மட்டுமே, 'எரிகின்ற வீட்டினில் கிடைத்த வரை போதும்' என்றவாறு பேராயக் கட்சிக்கு நயன்மை கற்பிக்க விரும்புகிறோம் என்று கூறித் தேர்தலில் போட்டியிட்டன. பொதுவுடைமைப் பேராசான் நம்பூதிரி அவர்கள் 'தேர்தலைத் தள்ளிவைப்பதும்' நடத்துவதும் ஆகிய இரண்டுமே தீமையானவைதாம் எனினும் நாங்கள் தேர்தலில் கலந்துகொள்வது குறைவான தீமையே (Lesser Evil) என்று புதிய விளக்கம் தந்தார்.

நெடுங்காலமாகப் போராடி வருகின்ற கொந்தளிப்பான சூழலில் மக்களின் உள்ளுணர்வுகளைச் சிறிதும் பொருட்படுத்தாது, இப்பொதுவுடைமையாளர்களின் செய்கை அறிவுடைமை உள்ளது தானா என்று எண்ண வேண்டியுள்ளது. அசாம் மக்களின் உணர்வுகளை மதிக்காது இவர்கள் நடத்திய இவ்வழிப்பு விளையாட்டு எனும் அரத்த வெள்ளத்தால், மக்களாட்சி முறையின் மீதே மக்களுக்கு வெறுப்புணர்வு தோன்றக்கூடும என்று அஞ்சிட வேண்டியுள்ளது.

தேர்தல் நடந்ததாக அறிவிக்கப்பட்ட இடங்களில் 5% விழுக்காடு முதல் 10% விழுக்காடு மக்களே ஒப்போலை அளித்துள்ளனர் என்று செய்திகள் கூறுகின்றன. பல ஒப்போலைச் சாவடிகளில் ஒருவர்கூட ஒப்போலையிடவில்லை என்ற நிலையும் இருந்துள்ளது. பொது அல்லது இடைத் தேர்தலில் ஒரு தொகுதியின் மொத்த தகுதியுள்ள ஒப்போலையாளர்களில் எத்தனை விழுக்காடு வாக்காளர்கள் தேர்தலில் கலந்துகொண்டால் தேர்தல் முறையாக நடைபெற்றதாகக் கருதப்படும் என்பதற்கான அடிப்படை வரை முறை ''மக்களாட்சி தேர்தல் சட்டத்தில்'' ('Representation of People Act') வரையறுக்கப்படவில்லையென்றே எண்ணத் தோன்றுகிறது.

எனவே நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து ஒரு தேர்தலில் தொகுதியிலுள்ள ஒப்போலையாளர்களில் இத்தனை விழுக்காடு மக்கள் (தோராயமாக) 50 விழுக்காடு ஒப்போலை அளித்திருந்தால் மட்டுமே அத்தேர்தல் குறிப்பிட்ட தொகுதி மக்களின் விருப்பத்தோடு நடைபெற்றது என்று கருதிடல் வேண்டும். இதற்கெனத் தேவையான சட்டதிருத்தங்களை உரிய முறையில் மேற்கொண்டிட முயல வேண்டும்.

அஃதில்லையெனில் நாளுக்கு நாள் மக்களாட்சி முறையில் மக்கள் நம்பிக்கை குன்றி, ஓரின ஆட்சிமுறைக்கு, அல்லது வல்லதிகார ஆட்சிக்கோ தள்ளப்படும், பெருங்கேடு விளையும் உரியவர்கள் இது குறித்து சிந்திப்பார்களா.

-தமிழ்வழுதி
சேலம்-636006.

தமிழ்நிலத்தைக் காப்போம்!

(கடலூர். மணிமாறன்)

உடனிருந்து கொல்கின்ற உறுபிணிகள் போன்றிருப்போர்
உறவை நம்பிக்
கடமையிலே நினைவின்றிக் காலத்தைப் பயன்படுத்தும
கருத்தும் இன்றி
மடமைநெறி வீழ்ந்திடுவீர்! மாற்றாரின் பேச்சினிலே
மயங்கிப் போவீர்!
தடம்மாறி நிலைமாறித் தன்மானம் பறிபோகத்
தவிப்பீர் என்றும்!

பழம்பெருமை நாள்தோறும் பறைசாற்றிப் பயனென்ன?
படத்தில் காணும்
அழகொளிரும் காட்சிகண்டு மெய்மறப்பீர் அவைநம்பி
அறிவை விற்பீர்!
கிழக்கெழுசெங் கதிர்மேற்கே கிளர்ந்தெழுமென்
றுரைத்தாலும் கேட்பீர்! மாறு
வழக்கத்தால் செக்கிழுக்கும் மாடானீர்! பிறர்பொருட்கே!
வாய்பிளப்பீர்!

கடுகுள்ளம் கொண்டோரால் கடுகளவும் பயனுண்டோ?
மொழியும் நாடும்
துடுப்பில்லாத் தோணியெனத் துவள்வதுவோ?
அவற்றுக்கே தொண்டு செய்யீர்!
அடுக்கிவரும் துயர்கண்டே அலமருவீர்! நிலைபிறழ்வீர்!
ஆற்றொணாது
விடுக்கின்ற பெருமூச்சால் விளைவுண்டோ? எதிர்நோக்கும்
வெற்றியுண்டோ?

கொள்ளும் நெறி தள்ளிடுவீர்! தள்ளுவதைத்
தாங்கிடுவீர்! குறைகள் கூறி
விள்ளரிய பழியேற்பீர்! வெகுளிக்குத் துணைபோவீர்!
வியந்து போற்றும்
கொள்கையிலே நின்றறியீர்! குழப்பத்தில் தோய்ந்திருப்பீர்!
குருட்டு வாழ்வில்
எள்ளளவும் பொதுநலத்தை நினைந்தறியீர்! இனம்
மொழிக்கே இழிவைச் சேர்ப்பீர்!

பொல்லாரும் நல்லார்போல் புனைவுகளால் தம்வலிவைப்
புகுக்கும் நாளில்
இல்லாமை அறியாமை இன்னபிற இருளகல
இடர்கள் நீங்க
எல்லார்க்கும் எல்லாமே பொதுவென்ற எண்ணத்தில்
இயைந்து நாமும்
நல்வழியில் நடைதொடர்வோம்! நற்றமிழை,
தமிழ்நிலத்தை நாளும் காப்போம்!

அன்பர்கள் கவனிக்க...

சிறப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்கிறோம். வெளியூரிலிருந்து வரும் அன்பர்கள் முன் கூட்டி இசைவு பெற்று வரவும்.

—அமைச்சர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

லாளர்கள் மற்றும் அதிகாரிகள் சிலர் சேர்ந்து ஒன்று கூடி, தமிழ்க்கல்வி வகுப்பின் தேவை குறித்துப் பேசியிருப்பதாகத் தெரிய வருகிறது. அதன் முடிவாக 'சேலம் உருக்காலை அனைத்துப் பணியாளர் தமிழ்க்கல்வி கோரும் குழு' ஒன்றும் அமைக்கப் பட்டதாகத் தெரிகிறது. இதன் தலைவராகப் பயிற்சித் துறை மேலாளர் ஒருவரும், கூட்டு அமைப்பாளராக ஒருவரும் ஆகிய இரண்டு தமிழர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளனராம். அக்குழு இனி அங்குள்ள பள்ளியில் தமிழ்க் கல்வியை வலியுறுத்துவதற்கான அனைத்து முயற்சிகளும் செய்யும் என்று தெரிகிறது.

தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களுக்கே தமிழ்க் கல்வி மறுக்கப்படும் பொழுது, நாம் எப்படி, கருநாடகத்திலும், அந்தமானிலும் தமிழ் வழிக் கல்வியையும், தமிழ்க் கல்வியையும் வலியுறுத்த முடியும்? இஃதென்ன கொடுமை தமிழ் நலமும், தமிழின நலமும் நாடும் தமிழர் கட்சிகளும், அமைப்புகளும் தங்களுக்குள் மாறுபட்டும் வேறுபட்டும் இயங்கிக் கொண்டிருப்பதால் ன்;று பார்ப்பனர்கள், ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பதுபோல், இப்படி இந்திக்கும் சமசுக்கிருதத்திற்கும் ஆக்கந்தேடிக் கொள்கின்றனர். மேலும் தமிழக அரசு உண்மையிலேயே தமிழ் நலம் நாடுகின்ற அரசாக இருக்குமானால் இப்படிப்பட்ட தமிழுக்கு மாறான செயல் முறைகள், தமிழகத்திற்குள்ளேயே நடக்க இயலுமா? இளிச்சவாய்த் தமிழர்களும், இரண்டக ஆட்சியாளர்களும் எண்ணி ஆவன செய்வார்களாக.

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேலை தரும்? வணிகர்களாகவும், கூலியாட்களாகவும் வடநாட்டில் வாழ, பள்ளி சென்று இந்தி கற்க வேண்டிய தேவை இல்லை. எழுத்தர் முதல் அதிகாரி வரையான பணிகட்கு மட்டுமே இந்தக் கல்வி தேவை; எனவே, இவ்வாறு வணிகர்களாகவும்; கூலியாட்களாகவும் தென்னகத்திலிருந்து சென்று வடநாட்டில் வாழ்வோரை ஒதுக்கி விட்டுக் கணக்கிட்டால் மாநில, நடுவண் அரசுப் பணிகளிலும், தனியார் நிறுவனங்களிலும், எழுத்தர் முதல் அதிகாரி வரையான பணிகளில் அமர்ந்துள்ள தென்னாட்டாரின் எண்ணிக்கை மிக மிகக் குறைவே. தென்னகத்தின் மொத்த மக்கள் தொகையோடு இதனை ஒப்பிட்டால் இவ்விழுக்காடு நுண்ணோக்கியில் பார்த்தால் தான் தெரியும். எனவே அனைவருக்குமே இந்தி கற்றுத்தர வேண்டும் என்ற தேவை ஏதுமில்லை. அவ்வாறு இந்தி கற்பதால் எப்பயனும் மற்ற மொழியினருக்குக் கிட்டப் போவதில்லை. மொழியறிவுக்காகக் கூடுதல் மொழி படிக்க வேண்டுமென்றால், அதற்கு வளமிக்க வங்காளமும், மராத்தியும் உள்ளன. இந்தி ஒரு வளமிக்க மொழியன்று. எனவே, கன்னடர் மலையாளி, தெலுங்கர் ஆகியோர் இந்தியால் பயனடைகின்றனர் என்று கூறுவது மறைப்பும், திரிப்பும் ஆகும்.

கர்நாடகாவிலிருந்து கோவாவுக்குக் கூலி வேலை செய்யச் சென்றோரின் நிலை என்னவாயிற்று? பம்பாயின் சேரிப்பகுதிகளில் உழன்று கொண்டிருக்கும் தமிழ் மக்களின் நிலை என்ன தெரியுமா? இவ்வினாக்கட்கு விடையளித்து விட்டு இந்தியை ஆதரிக்கும் திரு செபமணி போன்றவர்கள் தமது தாளத்தை ஓங்கித் தட்டட்டும்.

மகாராட்டிரத்தில் இந்தித் திணிப்பின் விளைவு என்ன என்பதை எண்ணிப்பார்ப்பது சாலப் பொருந்தும். இங்குள்ள பொதுமக்கள் இந்தியை உவப்புடன் முயன்று கற்று வருகின்றனர். இதனால் இவர்கள் பெற்ற பயன் என்ன? மகாராட்டிரம் இந்தியாவிலேயே செல்வச் செழிப்பு மிக்க மாநிலமாகும். சுற்றுலா செல்வோர், வணிகர் போன்றோர் தவிர வேறு காரணியங்களுக்காக இவர்கள் வெளி மாநிலங்களுக்குச் செல்லத் தேவையில்லை எனவே, இவர்கள் தமது இந்தியறிவைப் பயன்படுத்துவது இந்தித் திரைப்படங்களைக் கண்டு களிக்க மட்டுமே. இஃது எனது கணிப்போ அல்லது கண்டுப்போ அல்ல; மகாராட்டிரத்து ஆன்றோர் பலரின் ஒருமுகமான கருத்து இதுவாகும்.

எதிஇதன் விளைவாக, இந்தித் திரைப்படங்கள், மராத்தியப் படவுலகை மராத்திய நிலத்திலேயே வீழ்த்த முடிந்தது. இவ்வளவுக்கும், மராத்திய மொழியில் சிறந்த அறிஞர்களும், திரைப்பட வல்லுநர்களும் உள்ளனர். இதற்கு பிஞ்சிரா, 'சிம்மாசன்' போன்ற சிறந்த திரைப்படங்களே சான்று. இருந்தும், மகாராட்டிரத்தின் மூலைமுடுக்குகளில் கூட மராத்திய படங்கள் புறக்கணிக்கப்பட்டு இந்திப் படங்களே ஓடும் வருந்தத்தக்க நிலை உள்ளது ''மராத்திப் படங்கள் சிறந்தவை அல்ல; இந்திப் படங்களே சிறந்தவை'' என்று பேசுவதை அங்குள்ள ஆண் மக்கள் ஒரு (வறட்டு) நாகரிகமாகக் கருதுகின்றனர். இருந்தும் மராத்திய திரையுலகு ஓரளவு உயிருடன் இருப்பதற்கு, மராத்தியப் பெண்குலமே காரணியம். இது தொடர்பாக மராத்திய செய்தித் தாள்களுக்கு வரும் கடிதங்கள், மராத்திய அறிஞர்களின் உள்ளக் கொதிப்பை விளக்குவனவாக உள்ளன.

தொகுப்புரை :

இந்தியாவின் இணைப்பு மொழியாக இருந்து இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் காக்கக் கூடியது இந்தி அன்று; ஆங்கிலமே. எப்பயனும் தர வியலாத இந்தியை அனைத்து மக்களும் கட்டாயமாகப் படிப்பதன் மூலம் நன்மை அடைபவர் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டோர் மட்டுமே தவிர மற்றவர்கள் யாரும் அல்லர்.

-இராச. கூத்தன், பழனி.

உ. த. மு. க.
உறவு மடல்

'தமிழ்நாடு கட்டிடத் தொழிலாளர் சங்கம்' 27-12-1982 இல் மாநில மாநாடு நடத்திற்று. முகவையில் 5000 பேருக்கு மேல் ஊர்வலம் வந்தனர். அவர்களின் முழக்கங்கள், உழைக்கும் மக்கள் இயக்கங்கள் அனைத்துக்கும் ஆதரவாக —சார்பாக எழுந்தன. இந்த வியப்பை எங்கே சொல்வது?

தமிழ் நாட்டில் ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்த்த வியப்பு—

தொழில் இயக்கக் கட்சிகளிடம் காண வேண்டிய கட்டாயப—

மக்களிடமிருந்து வருகின்றதென்பதை இந்த ஊர்வல முழக்கங்கள் உணர்த்தின.

சாதி, மதம் கடந்தனவாக—

தமிழின உறவின் தேவையாக

ஒன்றுபட்டு வரும்

ஆற்றல்களின் அணிவகுப்பைக் கட்டுவதில்

இனியேனும் இந்தத் தமிழ் மண்ணின்

'தலைகள்' நினைத்துப் பார்க்க வேண்டும்!

-பறம்பை அறிவன்

மலேசியா முழுமைக்கும் தாய்மொழிக் கல்வி வகுப்பான தமிழ்ப் பாடம் நடைபெறவில்லை!

- கோலாலம்பூர் - (நம் செய்தியாளர்)

1982 வரை மலாய்மொழி ஆரம்பப் பள்ளிகள் இடைநிலைப் பள்ளிகளில் P. O. L. என்ற தாய்மொழி (தமிழும் சீனமும்) வகுப்புகள் நடந்து வந்தன. அது இப்போது நிறுத்தப்பட்டு விட்டது. மாதம் மூன்று ஆகியும் தொடங்கப்படவில்லை. என்ன காரணம் எனக் கல்வி அமைச்சு சொல்லவில்லை சிக்கனத் திட்டத்தினால் பல இலக்கக்கணக்கான பிள்ளைகளுக்குச் சீனமும், தமிழும் இல்லாமல் நிறுத்தப்பட்டதால் அவர்களின் கல்வி தடுக்கப்படுவதுடன், தேர்வில் தமிழை ஒரு பாடமாக எடுக்க இயலாமற் போய்விட்டது என மக்கள் கருதுகின்றனர் என்று நம் செய்தியாளர் எழுதியிருக்கிறார். ஏறத்தாழ இரண்டு இலக்கம் தமிழ்ப் பிள்ளைகளுக்கு இந்த வாய்ப்பு இதுவரை இருந்தது இந்த ஆண்டு இல்லை. எப்போது மறுபடி தொடங்கும், எனத் தெரியாது எனச் சொல்லப்படுகிறதாம். மலாய்ப் பள்ளிகளான தொடக்கப் பள்ளிகளில் இவ்வாறு ஓர் இலக்கம் இந்தியப் பிள்ளைகள் படிக்கின்றனர். குமுக மற்றும் தமிழ்க் கல்வியாளர்கள், மலேசியத் தமிழ் இலக்கியக் கழகம் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றன. இக்கழகம் இதுபோல சிக்கல்களுக்காகவே பத்து ஆண்டுகளில் பல மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் நடத்தி வந்திருக்கிறது. இவ்வாண்டும் நடக்குமாம்.

''அண்ணா!''

''என்ன தம்பி?''

''இந்தியத் துணைக்கண்டத்திலேயே முதன் முதல் தொழிற் சங்கத்தை நிறுவியவர் யார் அண்ணா?''

'தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் தாம்''.

''தமிழ்நாட்டில் பேராயக் கட்சி கால் ஊன்றக் காரணியமாக இருந்தவர்களில் அவரும் ஒருவர் தாமே?''

''ஆமாம்''

''மாந்த வாழ்க்கையும் காந்தியடிகளும், 'பெண்ணின் பெருமை' போன்ற அரிய பெரிய நூல்களை இயற்றியவர் தாமே அவர்?''

'ஆமாம்' ''தமிழில் நாளேடும் நடத்தி வந்தவர் தாமே அவர்?

''ஆமாம்''.

''பல வகையிலும் தமிழர்க்கும் தமிழுக்கும் சிறந்த தொண்டாற்றிய திரு. வி. க. அவர்களின் நூற்றாண்டும் பாரதியார் நூற்றாண்டில் தானே வந்தது?''

''ஆமாம்.''

''ஆனால் பாரதியார் நூற்றாண்டைப் போல், ஆண்டு முழுவதும், பல ஊர்களிலும், வானொலி தொலைக்காட்சிகளிலும், திரு. வி. க. நூற்றாண்டு கொண்டாடப்படவில்லையே! திரு. வி. க. அஞ்சல் தலை வெளியிடப்படவில்லையே! அது ஏன் அண்ணா?''

'நீயே சொல் தம்பி?''

''பாரதியார் பிறந்த குலத்தில் திரு. வி. க. பிறக்கவில்லை என்பதனால் தானே?''

''எனக்குத் தெரியாது தம்பி!''

—தமிழவேள்

உ. த. மு. க.வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல், அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவுஎண். TN/MS(C)\657

அனுப்புதல்:
'தமிழ் நிலம்'
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

உறுப்பினர்.
ஆண்டு கட்டணம் ரூ. 36/-
அரையாண்டு கட்டணம் ரூ. 18/-

பெறுநர்.
நூல் அஞ்சல்
திரு / திருவாட்டி.

ஆசிரியரும், வெளியிடுபவரும் : பாவலரேறு பெருஞ்சித்திரனார், அச்சிடுவோர் 'தென்மொழி' அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.